ஆங்கயற்க...

"பொங்குருச் செல்வங் கல்வி பொ...
இங்கெமக் கருள வல்ல வினையிலா வெ...
பங்கயத் தடஞ்சூழ் கூடற் பவளமால் வரை...
அங்கயற் கண்ணி மங்கை யடிக்கம லங்கள் பே...

பெரும்பற்றப்புலியூர்...

மலர்-௧. { இரத்தாக்ஷி௵ வைகாசி-ஆனி௴ 1924-௵ மே-ஜூன்-ஜூலை௴ } { இ... அ...

காமந்தகீய நீதிசாரம்.

(245-ம் பக்கத்தொடர்ச்சி.)

19. மேலேகூறிய குணங்கள் நிறைந்தவனும், உறுதியு...
னும், உலகவழக்கத்தை யறிந்தவனுமான அரசனிடத்தில் ஜன...
தகப்பனிடத்தில் குழந்தைகள் அன்புடனிருப்பதுபோல அ...
னிருப்பார்கள் அதனால் அவ்வரசன் பார்த்திபன் (பூமிக்கு ஈசுவ...
என்று அழைக்கப்படுவான்.

20. மேலேகூறிய குணங்களையுடையவனும், முறை...
காப்பாற்றுபவனும், இந்திரனைப்போன்றவனுமான அரசனை...
ந்து உலகம் செல்வம் முதலியவற்றில் வளர்ச்சியடைகிறது...

21. கேட்கவேண்டிய விஷயங்களில் ஆசையும், ...
கேட்டபொருள்களை மனத்தில் வாங்கிக்கொள்ளுத...
மறவாமையும், ஊஹித்தறிதலும், யுக்திக்குப் பொ...
தள்ளிவிடுதலும், காரணங்களுடன் பொருள்களை...

அவமதித்தலைப் பொரு
தகின் குறிகளாம். மேலே
முடையவன் அரசனாக இருப்பதற்
ன்.

, வாய்மை, ஆற்றல் ஆகிய இம்மூன்றும் அரச
குணங்களாம். இவற்றுடன் கூடிய அரசன் மற்றெல்
ாயும் பெறுவான்.

நற்குடியிற்பிறந்தவர்களும், தூய்மையுள்ளவர்களும், ஆண்
மைந்தவர்களும், கல்வியறிவுற்றவர்களும், அரசனிடத்தில் அன்
வர்களும், அரசன் நீதியை நடத்துகின்றவர்களும் ஆகிய தன்
பொருந்தியவர்கள் அரசனுக்கு வினைசெய்வோர்களாயிருக்க
ண்டும்.

25. அவர்கள் உபதைகளால் தெளியப்பட்டவர்களாகவும்,
சனுக்குக் காரியத்தின் பலனுண்டாகும் வரையிலும் முயற்சிக்
றவர்களாகவும்அரசனிடத்தில் அன்புடையவர்களாகவும்இருந்து
ண்டு அரசன் செய்ததையும் செய்யவேண்டியதையும் ஆராய்ந்து
க்கவேண்டும்.

26. அரசனருகில் அடையும் வண்ணம் செய்வதற்கு உபதை
ன்றும், உபாயம் என்றும் பெயராம். அதனால் அரசர்கள் வினை
ய்வோரைப் பரீக்ஷை செய்யவேண்டும்.

27—29. அடக்கமுள்ளவனும், நகரத்தில் பிறந்தவனும், நற்
லத்தில் உதித்தவனும், நல்லநடக்கையுள்ளவனும், ஆற்றலுள்ள
ும், நன்றாகப் பேசுபவனும், காலத்திற்குத்தக்க அறிவுள்ளவனும்,
ை யறிந்தவனும், ஊக்கமுள்ளவனும், காலத்தைபொத்துக் காரி
செய்பவனும், செருக்கற்றவனும், மனவுறுதியுள்ளவனும்,
லையுடையவனும், இடுக்கண்வந்துற்ற காலையில் அழியாத
ம், வாய்மை, நற்குணம், நல்லமனம் ஆகிய இவற்றை
ருவிஷயத்தில் நிலையாயிருப்பவனும், பிரபுத்வமுள்
வனும், சில்பசாஸ்திர மறிந்தவனும், சுருசுறுப்

புள்ளவனும், விஷயங்க...
வாதவனும் உறுதியான பக்தியுள்ளவனும், ...
களைச் செய்யாதவனும் வினைசெய்வோனாக இருக்கத்த...

30. மறவாமை, வினைசெய்வதில் ஊக்கமுடைமை, ஆராய்தல், தெரிந்து தெளிதல், உறுதி, தன்னுடைய ஆலோசனை வெளியாகாம லிருத்தல் ஆகிய இவைகள் மந்திரிகளின் பெருமை பொருந்திய குணங்கள் என்று கூறப்படுகின்றன.

31. புரோஹிதன் மூன்று வேதங்களிலும் தண்ட நீதியிலும் தேர்ந்தவனாயிருக்கவேண்டும். அதர்வ வேதத்தில் கூறிய வண்ணம் சாந்திகம், (அரிஷ்டங்கள் நிவர்த்தியாவதற் குரியசர்மா) பௌஷ்டிகம் (வளத்தைப் பெருக்கும் கர்மா) என்பவற்றை எப்பொழுதும் அரசன் பொருட்டுச் செய்யவேண்டும்.

32. அறிவுள்ள அரசன் மந்திரிகளுடைய அறிவையும், செயலையும் அவர்களை யறிந்தவர்களிடமிருந்து ஆராய்ந்தறிய வேண்டும்.

33. அரசன் தன்னுடைய வினைசெய்வோர்களின் குலத்தையும், நிலைமையையும், குற்றத்தையும், வினைசெய்வதில்ஊக்கத்தையும், சிறந்த அறிவையும், மறவாமையையும் அவர்களின் உறவினர்களிடமிருந்து அறிந்துகொள்ளவேண்டும்.

34. வினை செய்வோர்களுடைய ஊக்கம் சிறந்த, அறிவு, மறவாமை ஆகிய மூன்று குணங்களையும், சோர்வின்மையையும், பிறர் சொல்வதைக்கேட்டு அதற்கு உடனே விடைகூறுந்திறமையையும் அரசன் தானாகவே யறிந்துகொள்ளவேண்டும். தான் அவர்களுடன் பேசுவதன் மூலமாக அவர்களுடைய சொல்வன்மையையும், உண்மை கூறுதலையும் அறியவேண்டும்.

35. ஆபத்துக்காலத்தில் வினைசெய்வோர்களுடைய ஊக்கத்தையும், பெருமையையும், பொறுமையையும், உறுதியையும், அன்பையும், மனக்கலக்கமில்லாமையையும் அரசன் அறிந்துகொள்ள வேண்டும்.

36. அவர்களுடைய நடத்தையினால் தன்னிடத்தில் பக்தியையும், சிநேகத்தையும், தூய்மையையும் அரசன் அறியவேண்டும்.

...ருந்து அவர்களுடைய ...க்கியத்தையும்,இயல்பையும் அவன் அறிந்து ...டும்.

37. அரசன் அவர்களுடைய வணக்கத்தையும், சஞ்சலமில்லாமையையும், பகையையுண்டாக்கிக்கொள்ளாமையையும், பெருந்தன்மையையும், அற்பத்தன்மையையும் தானே நேரில் தெரிந்துகொள்ளவேண்டும்.

38. அவர்களுடைய வெளியில் தோன்றாத மற்றக்குணங்களையும், தொழில்களையும் அவர்கள் செய்யும் தொழில்களாலேயே அறியவேண்டும், ஆகையால் நேரில் தோன்றாத செய்கையுள்ளவர்களின் காரியங்களை அக்காரியங்களின் முடிவிலிருந்து தெரிந்து கொள்ளவேண்டும்.

39. தகுதியற்ற செயல்களைச்செய்யும் அரசனை மந்திரிகள் தடுக்கவேண்டும். அரசனும் பெரியோர்களுடைய வார்த்தைகளைக் கேட்கவேண்டும்.

40. அரசன் அறிவற்றவனாயிருந்தால் இவ்வுலகமும்அறிவற்றதாக ஆகும்;அவன் நல்லறிவுடனிருந்தால் சூரியன் உதயத்தில் தாமரைமலர்வதுபோல இவ்வுலகமும் அறிவுள்ளதாக இருக்கும்.

41. ஆகையால் அறிவு, தைர்யம்,முயற்சி முதலியனவாய்ந்த அமைச்சர்கள் அரசன் செய்யவேண்டிய காரியங்களை அவனுக்குத் தெரிவிக்கவேண்டியது.

42. தீயவழியில் செல்லும் அரசனை, சுவதந்திரத்துடனிருந்து அங்ஙனம் செய்யவொட்டாமல் தடுக்கும் மந்திரிகள் அவ்வரசனுக்குச் ஸ்நேகர்களாகவும் ஆசார்யர்களாகவும் ஆகிறார்கள்.

43. தீயவழியில் செல்லும் அரசனை அது செய்யவொட்டாமல் தடுக்கும் மந்திரிகள் சிநேகிதர்களாக மாத்திரம் கருதப்படாமல் ஆசார்யர்கள் என்றே கருதப்படுகிறார்கள். (தொடரும்)

பத்திராசிரியர்.

திருக்குறள் த[illegible]

(262-ம் பக்கத்தொடர்ச்சி.)

8-வது அன்புடைமை.

[அன்பாவது ஒருவர் பிறரின்பதுன்பங்களைத் தமவாகப்பாவித்து மகிழ்வதும் வருந்துவதுமாகிய நன்மனப்பாங்கு. இது இல்வாழ்க்கையாகிய நன்னிலத்தில் தானுயுண்டாவதோர் விழுக்குணம். முந்தித்தனது பெற்றோர்மருங்கு முளைத்தெழுந்து, பிந்திஉடன் பிறந்தார் மாட்டுங்கொழுந்தோடிப்பொருந்தி, அப்பால் மனைவி மக்களைத் தழுவிச்சுற்றிச் செழிப்புறவளர்ந்து, காலவடைவில் தொடர்புடையாரிடத்தெல்லாம் படர்ந்து பற்றிப்பயனளித்து நிற்பதாகிய இவ்வன்பு இல்வாழ்வானிடத்தில் மிகவும் வேண்டப்படும். இல்வாழ்வானுக்கும் அவனுடைய வாழ்க்கைத்துணைவிக்கும் பரஸ்பரம் அன்பில்லையாயின் இல்லறம் இனிது நடைபெறாது.]

ஒருவனுக்கு எதிலாரிடத்துப்பிரியமும், நல்லாரோடுநட்பும், எல்லாவுயிர்கண்மீதும் அருளுங்கிளைத்தற்கு அன்பேமூலம். அவ்வன்பு தான் கண்ணுக்குப்புலப்படாது. ஒருவன் மனத்தின்கண் மறைந்து கிடந்து "நெஞ்சுகொளினல்லது காட்டலாகாப்பொருள்"களில் ஒன்றாயிருப்பினும், தனதன்புக்குரியார் துன்பங்கண்டுழித் தன்னையறியாமலே கண்ணீர்சோர்வதாகிய காரியத்தால் காரணமாகிய அன்புண்மை அறியப்படும். எழுவகைப்பிறப்பினுள்ளுமுயர்ந்ததாகிய இந்த மானிடவுடலையுற்று உயிர்பிறப்பது அன்புசெய்தற்பொருட்டே என்பதை நாம் நன்குதேர்ந்து அன்போடுகூடிய நெஞ்சினராகி நாம் பிறர்க்குபயோகப்படவேண்டும். அன்பகத்தில்லாதவர் தமக்குப்புறம்பாகிய பொருள்களாலேனும் பிறர்க்குச்சிறிதும் பயன்படார். அன்புடையவரோ தமது பொருளையேயன்றி உடலுயிர்களையும் பிறர்க்கீந்து உற்றிடத்துதவிபுரிவர். அன்புடையவர் பிறர்க்குததீங்கு பயக்கத்தக்க பாவச்செயல்களை ஒருகாலுஞ்செய்யநினையார். ஆகையால் அன்பே ஒருவனுடைய மனத்தை அறத்தினவழியே முடுக்கித் தூண்டுந் துடுப்பும் பாவத்தினின்று விலக்கியோட்டுஞ் சுக்கானுமாகும்.

...றுப்பில்லாது கை, கால், ...வுறுப்புக்களும் இடம்பொருளேவலாகிய சாதனங் ...மைந்திருப்பினும் அவற்றாலவன் யாதொரு பயனையும் அடையமாட்டான். அன்புகாரணமாக அதன்வழித்தோன்றிய உடலே உயிரோடு கூடியவுடல் எனத்தகும்; ஏனைய மீந்தோல் போர்த்த என்புச்சட்டகமேயன்றி வேறல்ல. ஆகையால், அன்பகத்தில்லாதவொருவன் நலமுறவாழ்வது, கற்பாறையில் வற்றியுலர்ந்த மரமொன்று தளிர்த்து வளருவது எவ்வளவரிதோ அவ்வளவசாத்தியமாகும்.

அன்புடையாராய் இல்வாழ்க்கையிலமர்ந்து இல்லறங்களை நடத்துபவர் இம்மையிலின்புற்று வாழ்வதோடு மறுமையிலுந் துறக்கத்தில் பேரின்பத்தைத் துய்ப்பதும், அன்பற்றவர், வெவ்வெயிலிடைப்பட்ட புழுக்களைப்போல அறக்கடவுளின் கோபத்தாற் கெட்டழிவதும் ஒருதலை.

9-வது விருந்தோம்பல்.

விருந்தோம்பலாவது ஒருவன் தன் வீட்டின்கண்வந்த அதிதிகளை உபசரித்துணவளித்தலாம். அவர் தாம் முன்னையறிவுண்மை பற்றி ஒருவனைக்குறித்துவந்தவரும், அவ்வாறின்றிவந்த அன்னியருமென இருவகையாராவர்.

ஒருவன் துறவறத்தைத் தான் மேற்கொள்ளாது இல்வாழ்க்கையில் அமர்ந்திருத்தல் முக்கியமாய் விருந்தினராய்த் தன்னுழைச் சென்றவரை உபசரித்துபகரித்தற் பொருட்டென்பதை ஒருகாலு மறக்கக்கூடாது. பசித்து வந்த விருந்தினரை வீட்டின் வெளியே வைத்துத் தானுள்ளே தனித்துண்ணல் தானுண்பது கிடைத்தற்கரிய தேவாமிருதமாயினும், செய்யத்தக்க காரியமன்று. தானுண்பதெதுவோ அதை வந்த விருந்தினரோடும் ஒக்கவுண்பதே தக்க முறையாகும். வந்தவிருந்தினரை தினந்தோறு மனமுவந்து பேணியுபசரித்து வாழ்பவன் ஒருகாலத்தும் வறுமைக்காளாகிவருந்தான். ஏனெனில், அவனுடைய வள்ளன்மையையும், அவன் பொருள் தக்கோர்க்குபயோகப்படுதலையுங் கருதித் திருமகள் அவன் வீட்டில்

என்று மனமகிழ்ந்துறைவார

பித்துப் பிந்தி மிகுந்ததைத்தா

ழனி விதையிடவேண்டிய அவசிய

ந்து மிக்க பலனைத்தரும்.

வந்தவிருந்தினரை அன்போடுபசரித் தனுப்

விருந்தினரை ஆவலோடெதிர்பார்த்து நிற்கும் ஒழுகலா

மையில் யாதொரு குறையுமின்றி நிறைசெல்வத்தனாய் வாழ்வ

மறுமையில் தேவருலகையுற்று அவர்களால் நல்லவிருந்தினனாக மதிக்கப்பெற்று மிக்வும் பாராட்டப்படுவான்.

விருந்தோம்பலாகிய இந்த நல்லறத்தின்பயன் அதின் பொருட்டுச் செலவாகும் பொருளினளவைக்குறியாது உபசரிக்கப்பெற்ற விருந்தினரின் கல்வியறிவொழுக்கங்களின் தகுதிக்கேற்றவாறாகும். பொருளைவருந்தியீட்டிப்பரிந்து காத்து, அதன்பயனை விருந்தோம்பலாகிய பேரறத்தைப்புரிந்தடைய அறியாதவர் அப்பொருளையு மிழந்து, பிறிதோர்பற்றுக் கோடுமின்றி இரங்கியேங்க நேரினும் நேரும். பெருஞ்செல்வராயிருந்தோரும் மிக்கதரித்திராவதற்கும் இதுவே காரணம். இதையறியாதவர்பெரும் பேதையரேயாவர்.

விருந்தினராய் ஒருவனிடத்துச் செல்பவர் தம்மை அவனெவ்வாறு ஏற்பனோவென்று ஐயுற்று மனந்துன்றி மெலிந்திருப்பாராதலின், அவரை அவன் இனிய முகத்தினனாய் வரவேற்று இன்மொழி கூறாவிடின் அவர்முகம் உடனே கூம்பியொடுங்கிவிடும். ஏனெனின், அவர் அனிச்சம் பூவினு மிகமெல்லியர்; இது கிட்டவைத்து மோந்தாலன்றிக்கருகிவாடாது: அவரோ தூரத்திலிருந்தே ஒருவனுடைய முகவேறுபாட்டைக்கண்டவுடன் மனஞ்சோர்ந்து சாம்பிவிடுவார்கள்.

---

10. இனியவைகூறல்.

இனியவை கூறலாவது ஒருவன் கேட்போருடைய செவியையு முள்ளத்தையுஞ் சுடத்தக்க கடுஞ்சொல்லாடலைத்தவிர்த்து, எவரிடத்தும் எக்காலத்தும் செவிக்கின்பமும் மனதுக்குவகையும் பயப்பன

கிய மென்மொழிகளையே வழங்கலாம். இது எவருங்கவனித்த

இதை ஒருவன் தன்னினு
ா, வலியோர் மெலியோராகிய
ண்டியதாயினும் விருந்தினர் மாட்டு
. தன்னைநோக்கித் தூரத்தே விருந்தினர்
தான் முகமினியனாய், அவர் கிட்டவந்ததும் முக
மரியாதை செய்தல் அவர்க்குணவளித் துபசரித்தலினு
லானது. மெய்யன்பும் இன்சொல்லுமின்றி இடப்படும் ஆமு
தன்ன அறுசுவையுண்டியினும் நிசப்பிரீதியோடும் பிரிய வசனத்
தோடு மளிக்கப்பட்ட உப்பில்லாப்புற்கையே அவர்க்கு ஆற்றவினிய
தாம்.

அன்போடு கூடியதும் வஞ்சனை கலவாததுமாய் அறத்தை
யறிந்த நல்லோர் வாயினின்றுவருஞ் சொற்களே இன்சொல்லெனப்
படும். அகத்தன்போடு முகமலர்ச்சியும் பேச்சினிமையுமே விருந்
தோம்பலாகிய இல்லறத்துக்கு முக்கியமானவை ஒருவனுக்குக் கண்
டாரனைவரும் விரும்பத்தக்க நலத்தைத்தரு நல்லணிகள் தக்கோர்
முன்பணிவுடைமையும் யாவரிடத்தும் இன்சொல் வழங்கலுமேயாம்;
பிறபொன்னாலு மணியாலு மியற்றிய பூண்கள் இத்துணை அழகு
செய்யமாட்டா. பிறருடைய இதத்தை நாடிச்செல்லும் பொருள்
களை அவர் இன்புற் றேற்குமாறு இனியமொழிகளால் என்றுமொரு
வன் சொல்லுமியல்பினனாய் இருப்பானாயின் அவனுக்குப் பகையென்
பதின்றி எவருடனும் நண்பே உளதாகும். அவன் ஒருபோதும் நல்
குரவால் வருந்தான். அவனுக்குப் பாவங்கள் சிதைந்துதேய அறங்
களே மேன்மேலும் வளரும் அது அவனுக்கு இம்மையில் எல்லா
நலங்களையுந்தந்து மறுமையிலும் மேலானவின்பத்தை எய்துவிக்கும்.

இன்சொற்கூறல் இவ்வாறு கேட்போர்க் கின்பத்தைத் தருவ
தோடுதனக்கும் இருமையிலும் நலம்பயக்கத் தக்கதாயிருக்க, இத்
தகைய இன்சொற்களைத் தவிர்த்து ஒருவன் வன்சொல் வழங்குவது
யாதுகாரணம் பற்றியோ யாமறியோம். இனிய நறுகனிகள் பக்கத்
திலிருக்க அவற்றைவிட்டுத் தீய துவர்க்காய்களை ஒருவன் விரும்பி
யுண்பதற்கும் இனியசொற்களிருக்க அவற்றையொழித்து கடுஞ்
சொற்களை ஒருவன் நயந்துபயோகித்தலுக்கும் அவர்தம் பேதைமை
யே காரணமாகும்.

11-வது செய்ந்நன்…

செய்ந்நன்றியறிதலாவது ஒருவர் தனக்குச்செய்த நல்லுபகார த்தைத்தான் என்று மறவாது மனத்திருத்தி …வர் மாட்டுள்ளன்பு செலுத்தி உற்றிடத்து உதவுதற்கு மனங்கிளர்ந்தெழு…லாம்.

தான் ஒருவருக்கு யாதோருதவியு முன் புரியாதிருக்க …வர் தனக்குச்செய்த உபகாரத்தை இவ்வளவினதென்று அறுதியிட்டு ரைக்கவொண்ணாது. அதற்குப் பதிலாக இவ்வுலக முழுவதையும் அதனோடு விண்ணுலகத்தையுங் கொடுத்தாலும் ஈடாகாது. ஒருவர் செய்த உபகாரத்தின் பெருமை அதன் பொருட்டுச் செலவான பொருளின் அளவைக் குறிக்காது, அவ்வுபகாரத்தை யடைந்தவர் அதனாலுற்ற நன்மையினளவுக்கு ஏற்றவாறாகும். பெரியதோர் ஆப த்துக் காலத்தில் ஒருவர் தனக்குச்செய்த உதவி வெகு சிறியதாயி னும் காலத்தையும், பயனையும் நோக்க இப் பூமியைக்காட்டிலும் பெரியதாக மதிக்கத்தக்கதாயிருத்தலுங்கூடும். அவ்வாறே யாதொரு பிரதிப்பயனையும் எதிர்பாராது ஒருவர் செய்த உபகாரத்தின் நலனைச் சீர்தூக்கின் அது கடலைவிட மிகப்பெரிதாகக் கருதற்குரியதுமாகும். அன்றியும் ஒருவர் செய்த நன்றி தினையளவு சிறிதாயினும் அதைப் பனையத்தனை பெரிதாக மதித்துப் பாராட்டுவது நல்லோரியற்கை. அவர்கள் தமது துன்பத்தை நீக்கிக் கண்ணீரைத் துடைத்தருளிய பெருந்தகையாளரிடத்துப் போதாத நட்பினராய் அவர் செய்தவுத வியை இப்பிறப்பின் மாத்திரமன்றி இனிவரும் பிறப்புக்களினும் மறவாமலிருப்பர். குற்றமற்ற பெரியோர்களின் சிநேகத்தை நாம் ஒருகாலும் விடக்கூடாது; அதுபோலவே நமக்குத் துன்பம் வந் துற்றபோது அதைப் பரிகரித்துபகரித்தவர்களுடைய நட்பையும் நாமொருபோதும் உபேட்சை செய்யக்கூடாது. ஏனெனில் ஒருவர் செய்த நன்மையை மறப்பது அறனன்று. ஆனால் பிறர்செய்த தீமையை அக்கணமே மறந்துவிடல் மிகவும் நன்று. நமக்கு முன் னொருசமயம் நல்லுபகார மொன்றைச் செய்துள்ளவர் பிந்தி எக் காரணத்தினாலேனும், எவ்வபகாரத்தை நமக்குச் செய்யினும், அந் நன்மையை நினைந்து இத்தீங்கை மறந்துவிடலே உத்தமகுணம்;

…வித்தப் பெரும்பாதகச் செயல்களைச் …அவற்றின் பயனாகிய நரகவாதையினின்று தப்பு…றகுரிய கழுவாய்கள் உள்ளன ஆனால் ஒருவர் செய்த நன்றியை …றந்த துரோகிக்கு யாதோருய்தியுமில்லை.

12-வது நடுவு நிலைமை.

நடுவுநிலைமையாவது ஒருவன் அன்புபற்றியாவது விரோதத்தினாலாவது நீதிநெறியின் விலகி ஒருபக்கஞ் சார்ந்தொழுகாது யாவரிடத்தும் அறத்தினின்று வழுவாது ஒப்பநடக்குந் தன்மையாம்.

நட்பினர், நொதுமலர், பகைவரென்னு மூத்திறத்தார் மாட்டும் ஒருவன் தன்னிலையிற்றிரியாது சமமாக நடக்கப் பெறுவானாயின், அவ்வறமொன்றுமே அவனுக்குப் பெருஞ்சிறப்பையுஞ் செல்வத்தையும் ஒருங்கேயளிக்கும். நடுவுநிலைமையை மேற்கொண்டொழுகுபவனுடைய செல்வஞ் சிறிதுஞ் சிதையாமலிருந்து அவன் வாழ்நாளளவும் அவனுக்குப் பயன்படுவதோடு அவன் வமிசத்தினருக்கும் நெடுங்கால முபயோகப்பட்டு நிற்கும். நடுவிகந்து ஒருவன் சம்பாதிக்கும் பொருள் அவனுக்காவது அவன் வழியினர்க்காவது யாதொரு நற்பயனையுந் தரமாட்டாது. கிடைத்தபொழுது நலந்தருவதாகத் தோன்றினும் இறுதியில் அது தீங்கை விளைத்துத் தம்மையுந் தம்மைச் சேர்ந்தாரையுங் கெடுத்துவிடுமென்பது நிச்சயம். இதை நன்குணர்ந்து எவரும் தகுதியற்ற செயல்களையும் அவற்றான்வரும் பொருளையும் சிறிதும் விரும்பாது அறவே விலக்கிவிடவேண்டும்.

பெரும்பொருள் படைத்தானொருவன் அதை நடுவுநிலைமையிற் றவறாது நின்றுபெற்றானா அல்லது அதினீங்கித் தீநெறியால் ஈட்டினானா, என்பதை அவனுடைய சந்ததியாராலேயே நாம் தேறத் தெளிந்தறியலாம். ஒருவனுடைய செல்வப்பெருக்கும் ஆக்கக்கேடும் கேவலம் அவனுடைய தற்காலச் செயல்களாலேயே யன்றிப் பழவினையின் பயனாய்ப் பண்டே அமைந்துகிடப்பனவாதலின் பொருள் காரணமாக ஒருபக்கஞ் சாயாமல் நடுவுநிற்றலே அறிவுடையோர்க்குத் தகவுடைத்தாம்.

நடுவுநிலையிற்றிறம்பாது நன்னெஞ்சினனாய் அறநெறியிலே ஒழுகும் நற்றகையாளனொருவன் வறுமையுற்றானெனினும், அவ்வறுமையை உலகம் இழித்துரைக்காது புகழ்ந்து கொண்டாடும்.

நடுவுநிலைமை இவ்வாறு நலம்பலபயத்தலான் பொதுவாக யாவவரும் அனுசரித்தற்குரிய சிறந்த குணங்களில் ஒன்றாயிருப்பினும் நீதிமன்றத்தலைவருக்கும் வணிகருக்கும் இன்றியமையாச் சிறப்புடையது.

நீதிநூலின்படி அறத்தை உணர்ந்துரைப்பதற்காக அரசனால் நியமிக்கப்பட்ட தருமாசனத்தர் இயல்பாக எப்பொழுதுஞ் சமமாக இருந்து தன்னிடத்திட்ட பொருளை அறுதியிட்டுள்ளவாறுணர்த்துந் துலாக்கோலைப்போலத் தமக்குள் மாறுபாட்டு வழக்குத் தொடுத்துத் தம்முன் வந்த இருவருடைய வழக்கையும் பட்சபாதமின்றி நடுநின்று நுணுகியாராய்ந்து உண்மையைக்கண்டு தீர்த்தல்வேண்டும். மனம் ஒருபாற் கோடாது நியாயவழியில் ஒரு தலையாக நின்றாலொழிய சொல்மாத்திரம் நீதிநூலோடு மாறுபட்டுக் கோணாது நியாயத்தைத் தழுவியிருத்தல் அவர்க்கு நடுவுநிலைமையாகாது.

வாணிகஞ் செய்பவர்க்கு நடுவுநிலைமையாவது அவர் பிறர் பொருளையுந் தமபோலெண்ணி கொள்வதுமிகையுங் கொடுப்பது குறையுமாகாது அளவொக்க நாடி. பிறரைப் பொய்சொல்லி வஞ்சியாது நியாயவழியிலே தந்தொழிலை நடத்தலேயாம். இதுவே அவ்வவருடைய வாணிகம் மேன்மேலும் விருத்தியாகி ஊதியமதிகரித்தற்குந் தக்கவழி.

"கம்பாரலயம்"
புரசைப்பாக்கம், சென்னை. } க. இராமரத்நம் ஐயர், B A.

பிருதுராஜ சரிதம்.

முகவுரை.

புண்யபூமியாகிய இந்தப்பரதகண்டத்தில் நீதிமுறை வழுவாது அரசுபுரிந்த மன்னர்கள் பதினாறுபேர்கள் என்று மஹாபாரதம் புகழ்கின்றது. அவர்களுடைய சரித்திரம் ஒவ்வொன்றும், ராஜபக்தி, ஈசுவரபக்தி, ராஜநீதி, பெண்கள் கற்புநிலை, மோக்ஷம் முதலான அரியவிஷயங்களை விரிவாய்ப் போதிக்கின்றது. அவற்றுள் பிருது ராஜனின் சரிதம், மேற்கூறிய விஷயங்களை நன்குபோதித்து, ஜனங்கள் இம்மண்ணுலகில் நடந்துகொள்ளவேண்டிய வழியையறிவித்து, விண்ணுலகில் சாசுவதமான சுகம்பெறுவதற்கு வழிகாட்டியாய் விளங்குகின்றது. இச்சரித்திர நாயகருக்கு, வைன்யர், பிருது, ஆதிராஜன் என்று மூன்று திருநாமங்கள் உண்டு. வேனராஜனுக்குப் புதல்வனானதால் வைன்யனென்றும், உலகத்தைச் சீர்ப்படுத்தியதால் பிருது என்றும், ஜனங்கள் ரஞ்சிக்க அரசுபுரிந்தவர்களில் முதல்வனானதால் ஆதிராஜன் என்றும், அத்திருநாமங்கள் பொருள்வாய்ந்தவையாகின்றன. காளிதாஸர் வடமொழியில் தாமியற்றிய குமாரசம்பவத்தில் பிருதுமஹாராஜன் பெருமையை வெளிக்காட்டியுள்ளார். அதாவது முன்பு பிருதுசக்கரவர்த்தியின் கட்டளைப்படி மற்றைய மலைகளெல்லாம், இந்த இமயமலையைக்கன்றாகவும், மஹாமேரு பர்வதத்தைக் கறக்கத்தெரிந்த இடையனாகவும் ஏற்படுத்திக் கொண்டு, பூமியிலிருந்து ஒளியேறிய இரத்தினங்களையும் மஹிமை பொருந்திய ஓஷ(விரை)திகளையும் கறந்தன. இவ்விதமான சரித்திரத்திற்குப் பலவருஷங்களாய் ஆதாரங்களைத்தேடி ஹரிவம்சம், ஸ்ரீபாகவதம், பாரதம், விஷ்ணுபுராணம் இவற்றை நன்காராய்ந்து மாணவர்முதல் முதிர்ந்தவர்வரை எளிதில் அறியும்படி ஏதோ என் சிற்றறிவிற்கெட்டியவரை எழுதியுள்ளேன். சிற்றறிவின் தன்மைக்கேற்பப் பிழை பல பொருந்தியிருத்தல்கூடும். அவற்றை அன்பர் மன்னித்துச் சாரமானவற்றை ஏற்றுக்கொள்வார்களாக.

(க) வது அத்தியாயம்.

பிருதுராஜனின் முன்னோர்களின் வரலாறு.

இவ்வுலக சிருஷ்டியின் தொடக்கத்தில் அவதரித்த ஸ்வாயம்புவமனு என்பவர், கடல்சூழ்ந்த பூமியனைத்தையும், நீதிமுறை வழுவாமல் அரசாண்டு வந்தார். பர்ஹிஷ்மதியென்பது அவருடைய தலைநகரம். அவர் எக்காலமும் ஸ்ரீமந்நாராயணனுடைய திருவடிகளைப்பணிந்து வந்தார்.

பிருதுராஜனின் தகப்பனான வேனனின் ஜனனம்.

அவருடைய வம்சத்தில் உதித்தயாவருமே, திருமாலையே ஆராதித்துத் தமது உயர்ந்த நற்குணங்களால் புகழ்பெற்று விளங்கினர். அவர்களில் அங்கன் என்ற மஹாராஜன் மிருத்யுவின் மகளான சுநீதா என்பவளை மணந்து அவளிடம் வேனன் என்ற புத்திரனையடைந்தான்.

வேனனின் துஷ்டத்தனம்.

அவனோ தன் முன்னோர்களின் நற்குணங்களுக்கு முற்றிலும் மாறுபட்ட குணத்தையுடையவன். தர்மத்தைப் புறக்கணித்து அதர்மத்தில் புத்தியைச் செலுத்துகிறவன். அவன் அரசுபுரியும்போது வேதமோதுதல் முதலான ஸன்மார்க்கங்கள் குறையத்தொடங்கின. அவன் தன் குடிகள் யாவரும் யாகஞ்செய்யக்கூடாது. அப்படிச்செய்யத்துணிந்தால் லோகபாலகனான என்னைக் குறித்தே செய்யவேண்டும் என்று விளம்பரஞ்செய்தான். மல்லிகைத்தோட்டத்தில் கள்ளிமுளைத்ததுபோல், விஷ்ணுபக்தர்கள் குலத்தில் இவன் ஜனித்தது படைக்கும் பிரமனுக்கே ஆச்சரியத்தை உண்டாக்கிற்று.

முனிவர் வேண்டுகோளைப் புறக்கணித்தல் அவன் அவ்வாறு கொடுங்கோல் மன்னனாயிருக்கும்போது மரீசி முதலான மஹரிஷிகள் வேனராஜனிடம்வந்து ஓ! பிரஜாபாலனே! யாங்கள் வெகுகாலம் யாகதீக்ஷை செய்யப்போகிறோம். தாங்கள் தடைசெய்யக்கூடாது. யாகத்திற்குக்குறைவு ஏற்படாது பாதுகாப்பது அரசர்களுக்கு ஸ்வதர்மம் என்று வேண்டிக்கொண்டனர். அப்போது

சினங்கொண்ட அவ்வேனன் அவர்களைப் பார்த்து, தர்மத்தைச் சிருஷ்டிக்கிறவர் என்னையன்றி வேறியார் உளார். மதியற்ற நீங்கள் என் மகிமையை அறியவில்லை. நான் நினைத்தேனாகில் பூமியைத் தஹிப்பேன். கடல்களாலும் மூழ்கச்செய்வேன். இம்மாத்திரமா? ஆகாயம் பூமி இவ்விரண்டையும் தகைவேன். ஆகையால் என்தாக்கினைப்படி நீங்கள் நடக்கவேண்டும்; என்று கடிந்துபேசினான்.

ராஜநீதி புகட்டல்.

அப்போது பொறுமையுள்ளவர்களான அம்முனிவர்கள் மதியற்றுக் கர்வங்கொண்ட அவ்வேனனுக்கு நயமாகஉபதேசஞ்செய்யத் தொடங்கினர். ராஜனே! தாங்கள் சற்று முழுமனதுடன் எங்கள் சொல்லைக் கேட்கவேண்டும். ராஜனுக்கு ராஜ்யமென்பது பூமியை யாளுவதற்கு உசிதமான செய்கை, பூமி என்பது வர்ணாசிரமம் முதலானவைகளை யாதரிக்கத்தக்க சௌகர்யங்களுள்ளது. வர்ணங்கள் என்பவை பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் என்பவை. ஆசிரமங்கள் என்பவை பிரும்மசாரி, கிருஹஸ்தன், வானப்ரஸ்தன், சந்நியாசி என்பவை. எவனுடைய ராஜ்யத்தில் வர்ணாசிரமங்கள் தழைத்தோங்குகின்றனவோ அந்த ராஜ்யத்தில் பரமாத்மா சகல ஐசுவரியங்களையும் அளிக்கிறார். மேலும் கேட்கவேண்டும். தங்கள் தங்கள் கடமையைத் தவறவிடுகிறவர்களைச் சிக்ஷிப்பது அரசன் கடமையல்லவா? அவ்வாறிருக்க நல்லவர்களின் நற்செய்கைகளைத் தடுப்பது நியாயமாகுமோ? நீதிமுறைப்படி அரசாளும் மன்னவன் சகல தருமங்களிலும் ஆறிலொருபங்கு பலனையடைகிறான். வர்ணாசிரமங்களைக் காப்பதற்கே பரமேசுவரர் ராஜனை ஏற்படுத்தியிருக்கிறார். அவ்வாறு பரமேசுவரனுடைய கட்டளைப்படி அரசு புரிகிறவனுக்கு ஆயுள், ஐசுவரியம், கீர்த்தி இவை பெருகுகின்றன. வேரூன்றாத மரங்களுக்கு ஜலம் விடுவது முதலிய முயற்சிகள் செய்தும் பயன்படுமா? ஆகையால் நல்வழியைக் கைப்பற்றி எங்களுடைய கோரிக்கையைப் பூர்த்திசெய்ய வேண்டும். அரசன் சகலத்திற்கும் காரணமல்லவா? அரசன் செவ்வனே ஆளும்போது எத்திசைகளிலும் இஷ்டங்கள் சித்திக்கும். சகலமான கெடுதிகளும் தணியும். திசை காப்பவர்களும் அம்மன்னனைப் பின்பற்றுவர்கள்

ஆகையால் மத்யமலோகபா பாலகனுயிருந்தாலும் உத்தமலோக பாலகன் என்று அறிஞர் அரசரைப் புகழ்கிறார்கள். ஆகையால் சுருக்கமாய் ஒரு வார்த்தை சொல்கிறோம். தேவர்களையும் அவர்களிலும் விசேஷமாய் நாராயணனையும் குறித்து யாகஞ்செய்யப் போகிறோம். அந்தயாகம் இடையூறின்றி நடைபெறும்படி செய்து உபகரிக்கவேண்டும் என்று. ஹிதோபதேசமாய் அறிவித்தனர்

உபதேசத்தைப் பறக்கணித்தல்.

இவ்வாறு வேனனிடத்தில் அவர்கள் உபதேசித்தது, ஒழுங்காயினும், காய்ந்த மணலில் வீழ்ந்த நீர்போலவும், கானகத்தில் ஒருவன் தன் வருத்தத்தைச்சொல்லிப் புலம்புவது போலவும் குருடனுக்கு கண்ணாடி காண்பிப்பது போலவும், வீணாயிற்று. இம்மாத்திரமட்டுமல்ல. அவன் மிகுந்த சினங்கொண்டு யஞ்ஞ புருஷனை விஷ்ணுவையும், மஹரிஷிகளையும், தகாதவார்த்தைகளால் நிந்திக்கத் தொடங்கினன். வேதப்பயிற்சியால் ஜடர்களான கேடுகெட்ட பிராம்மணர்களே! அதர்மத்தைத் தர்மமாகச் செப்புகின்ற நீங்கள் சிறுவர்களே, பிழைப்பைத்தரும் வேந்தனை விட்டு அரூபியான விஷ்ணு என்றயாரையோ கொண்டாடுகிறீர்கள். அரசனே சகல தேவதாஸ்வரூபன். ஆகையால் தப்பெண்ணங்களை விட்டுவிட்டு என்னைக் குறித்தே யாகஞ் செய்யுங்கள் என்று மறுமொழி பகர்ந்தான்.

வேனனின் நாசம்.

இவ்வாறுகூறவே அம்முனிவர்கள்சாந்தகுணத்தையேதனமாகக் கொண்டவர்களாயினும் கோபங்கொண்டவர்களானார்கள். க்ஷத்திரியர் பலம் எங்கே? பிரும்ம நிஷ்டர்கள் பலம் எஙகே? கௌசிகரால் வசிஷ்டரிடம் எய்யப்பட்ட அம்புகள், அவரது ஒரு பிரும்மதண்டத்தாலே விழுங்கப்பட்டனவன்றோ? என்று கூறி, ஆயினும் மறுபடியும் ஒருவாறு கோபத்தையடக்கி வேனனை நோக்கி, 'ஓ அரசனே! அநீதியைக் கைப்பற்றின அரசனிடம் செல்வம் நீடித்திராது. நிஷ்காரணமாய் அனேகரைப் புசித்த வாதாபி இல்வலி என்ற அசுரர்கள் அகத்திய முனிவரிடம் விரோதித்து மடிந்தார்கள். அப்படிச்சொல்லியும் அவன் கடிந்தபோது, அவன் மடிந்தால் தான் உலகம்

நன்மை பெறும் என்று நிச்சயித்து, விஷ்ணுவின் நிந்தையாலேயே பதிதனான அவனை பிர்ம்ம பலத்தால் ஜொலிக்கிற ஹுங்காரத்தால் தரையில் வீழ்த்தினார்கள். பிறகு தங்கள் தங்கள் ஆசிரமம் சென்றார்கள்.

அரசின்மையால் துன்பம்.

அவர்கள் சென்றதும் அவன் தாயான சுநீதா துயரங்கொண்டு பச்சிலைச்சாறு பிழிந்து காய்ச்சின எண்ணெய்க் கொப்பரையில், அவன் சரீரத்தைப் போட்டு வைத்திருந்தாள். இச்சந்தர்ப்பத்தில், ராஜ்யம் முழுதும், திருட்டுப் பயந்தலைப்பட்டது. ஆகாயத்தில் தூமகேது முதலிய உத்பாதங்கள் உண்டாயின. நல்லொழுக்கம் குன்றத் தொடங்கியது, உடைந்த பானையிலிருந்து நீர் ஒழுகுவதுபோல், பிரும்ம நிஷ்டருடைய பிராம்மண்யமும் நழுவ ஆரம்பித்து விட்டது.

நிஷாதர் முதலானவரின் உற்பத்தி.

இவ்வாறிருக்கையில் மறுபடியும் அம்முனிவர்கள், விஷ்ணு பக்தரான அங்கரின் வம்சத்திலுதித்தவர் நிர்வீர்யராயிரார் என்று உறுதிகொண்டு சுநீதையிடமிருந்து அச்சரீரத்தை வரவழைத்து, அச்சரீரத்தின் இடது தொடையைக்கடைந்தார்கள். அதிலிருந்து கறுப்புநிறமுள்ள ஒருகுள்ளனான புருஷன் தோன்றிக் கைக்கூப்பி நின்றபோது, உட்காரு என்று பொருள்வாய்ந்த 'நிஷீத' என்ற வடமொழிச் சொல்லைக் கூறினார்கள். அதனால் அவன் நிஷாதன் என்று பிரசித்திபெற்று, நிஷாத வம்சத்திற்கு மூலபுருஷனானான்.

கட்டுரை.

உலகத்தில் சாதாரணமாய் ஒருவர்கருத்தை யொருவரறிய வேண்டுமானால், நிருபத்தின் மூலமாகவோ அல்லது நேர்நின்று உரையாடல் மூலமாகவோ வறிந்துகொள்வார்கள். அதுபோலவே உலகத்திலுள்ள நுண்பொருள்களை எல்லாம் ஒருவனே கல்வி கேள்விகளாலறிதல் அசாத்தியமான காரியமாகும். ஏனெனில் சின்னாட் பல்பிணிச் சிற்றறிவினராயிருத்தலின். அதனாற்றான், ஒவ்வொருவரும் தான்கண்ட நுண்பொருள்களைப் படிப்போர்க்கின்பமும் படிக்கப்

படிக்க வதனிடத்து ஊக்கமும் பற்றுமாறு அரியகட்டுரைகளை வரைந்து பத்திரிகைகள் மூலம் வெளிப்படுத்தியும் பல்லார் கூடியவவையின்கண் குன்றக்கூறல் முதலிய குற்றங்களின்றிப் பத்தழகோடுங் கூடினதாய்க் கேட்போருள்ளத்தைக் கவருமாறு பேசியும் வந்தார்கள். இம்மாதிரியான நம் முன்னோர் முறைகள் யாவும் சாலப் போற்றத்தக்கதே. நிற்க. தற்காலத்திலோ நம் நாட்டில் எங்கு பார்த்தாலும் கட்டுரை வரைவோரும் மேடைமீதேறிப் பிரசங்கிப்போரும் பெருத்துவிட்டனர். இவர்களிற் சிலர் நம் முந்தையோர் முறையை நழுவவிட்டுத் தம் மனம்போனவாறு வரைந்தும் பேசியும் வருகிறார்கள். ஆதலினிவர்கள் நம் முந்தையோர் முறையைக் கைப்பற்றுவான் வேண்டி இவ்வரிய விஷயத்தை வரையலாயினன். அறிவிலியாகிய யானிவ்விஷயத்திற் பிரவேசித்தது அம்பாமளக்க வேண்டி யறிவிலி நாழிகொண்டு இம்பரில் நடந்தவாபோலாகுமேயன்றி வேறின்று.

முன்னர்க் கட்டுரை வரையும் முறையைக் கூறிப் பின்னர்க் கட்டுரை பொழியும் முறையைக் கூறுவாம். கட்டுரை வரைவோர் தான் எடுத்துக்கொண்ட விஷயத்தைச் செவ்வனே வரைதற்கேற்றவாற்றல் தனக்கிருக்கிறதாவென்பதைக் கண்டிப்பாய் முதலில் ஆராய்ந்து கொண்டு பின்னர் அவ்விடயத்தை ஐந்தாறு பாகங்களாகப் பாகுபடுத்தி யிடத்திற்குத் தகுந்த மேற்கோள்களுடன் கற்றார் கல்லாராகிய விருதிறத்தார்க்கும் போதமாமாறு செவ்விய செந்தமிழ் நடையில் தான் கருதிய பொருளை விளக்கக்கூடிய தகுதிவாய்ந்த சொற்களை யிடமறிந்து உபயோகித்தல் வேண்டும். அதனோடு நிற்காமல் சந்தர்ப்பத்திற்குத் தகுந்தவாறு, களிப்பு, வெகுளி, அவலம் முதலிய சுவைகளை யவ்வவற்றிற்கேற்ற சொற்களைக்கொண்டு பேசுவதுபோல் கற்போருள்ளங் கவருமாறு வரைதல் வேண்டும்.

அவ்வாறில்லாமல் எல்லாம் ஒரேமாதிரியாக வரைந்துவிட்டால் அது கற்போர் கேட்போர்க்கு ஊக்கம் செல்லாது அருவருப்பை விளைவிக்கக்கூடியதாய்த் தோன்றி, தனக்கும் பிறர்க்கும் வீண்காலம் போக்குதலே தொழிலாய் முடியுமேயன்றி வேறின்று. இதுபற்றித் தான் நம் பொய்யில் புலவரும்,

"சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொ லச்சொல்லை
வெல்லுஞ்சொ லின்மை யறிந்து"

என்று திருவாய் மலர்ந்தனர். நம்முன்னோர்கள் இம்முறைகளை யெல்லாம் கையாடி வந்ததனாற்றான் அவர்கள் வாக்கியங்களியாவும் பொன்போற் போற்றதக்கதாய் இற்றைக்கு மிராநிற்கின்றது. பத்திரிகைகட்கு விஷயதானஞ் செய்வோரும் பத்திரிகைகட்குத் தலைவராகவிருப்பவரு மித்தகைய விலக்கணங்களிற் குறைபாடில்லாதவராக விருத்தலின்றியமையாததாம். மேற்கூறிய அவ்விலக்கணங்களமையப்பெறாத தலைவர்கள் கற்போர் கேட்போராற் பழியெய்தப்படுவர்.

இன்னுஞ்சிலர் கட்டுரை வரைதல் என்றால் வெள்ளைக்கடுதாசியைக் கருப்புக் கடுதாசியாக்குதல் என்று எண்ணிக்கொண்டு தம் மனம்போனவாறெல்லாம் வரைவதோடமையாது இரண்டொரு வரி வசனமும் பின்னிரண்டடி செய்யுளும் பின்னிரண்டடி வசனமும் பின்னான்கடிச் செய்யுளுமாகப் பக்கத்தைப் பூர்த்திசெய்துவிடுகின்றனர். உதாரணமாக அவர்கள் எடுத்துக்கொண்ட விடயம் நட்பானால் அவ்வியாசத்தின் முடிவு சிநேகம்வேண்டும் என்றுமாத்திரமிருக்குமேயொழிய வேறு நுண்ணிய விடயங்களிரா.மேகத்தைக் கண்டு மயிலாடும் என்ற விடயத்தைப் பதினைந்துபக்கம் வரைவாரும் உளர். இதனால் போந்தபயன் ஒன்றுங்காணவில்லை.

முன்னர்க் கூறியதிற் சிலர் ஆன்றோர் செய்யுட்களை எடுத்துக் கூறலாகாதாவென ஐயுறக்கூடும். நான் ஆன்றோர் செய்யுட்களை எடுத்துக் கூறலாகாதென்று கூறவரவில்லை. தகுந்தபொருளை எடுத்து வற்புறுத்தவோ அல்லது முன்னோர் முறைகளை விளக்கவோ வேண்டியதாயிருப்பின் இன்னோர்க்குமிஃது உடன்பாடு என்று ஆன்றோர் செய்யுட்களை எடுத்துக் கூறலாமேயன்றிச் சதா உபயோகித்தல் கூடாதென்பதேயாம். ஏனெனில் ஆன்றோர் செய்யுட்களை யவரவர்கள் செய்த நூலினின்றும் பார்த்துக்கொள்ளலாமாதலின், இதுகாறுங் கூறியவாற்றால் கட்டுரை வரைவோர்க்குவேண்டிய விலக்கணங்களும்,

"எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு"

என நம் புலவர் பெருமான் கூறியாங்கு நுண்பொருளை யெண் பொருளவாகச் சொல்லக்கூடிய சக்தியும் பிறர் கூறும் நுண்பொருளை விரைவில் அறியக்கூடிய சக்தியும் அவசியம் வேண்டும். இனிக் கட்டுரை பொழியுமுறையைக் கூறுவாம். (தொடரும்)

க. பழநிக்குமரன்,
தண்டமிழ்த்தொண்டன்.

---

* கீரர் எனப் பெயர்பெற்றார் பலர்.

---

1. நக்கீரர்:—இவர் மதுரைக் கணக்காயனார் மகனார். (கணக்காயனார்=பள்ளிக்கூட உபாத்தியாயர்) இவர் மதுரைச்சோமசுந்தரப் பெருமானுற் செய்த அகப்பொருட் சூத்திரத்திற் குரைசெய்தவர். திருமுரு காற்றுப்படையும், நெடுநல்வாடையும், கயிலைபாதி காளத்தி பாதி யென்ற வந்தாதியும், நாலடி நாற்பதென்னும் யாப்பிலக்கணங் கூறும் ஒருநூலு மியற்றியுள்ளார். இவரே சோமசுந்தரப் பெருமானோடு வாதாடியவர். அகநானூற்றில் 17 பாக்களும் நற்றிணையில் 4 பாக்களு மியற்றியுள்ளார். இவரது கவித்திறத்தையும் வர்ணனையையும் அவ்வப்பாட்டுக்களிற் கண்டுகளிக்க வேண்டுமேயன்றி யிவ் வியாசத்தி லெழுதிமுடியாததுபற்றி விடுத்தனம். இவர், கபிலர் கிளிகளைவளர்த்து நெற்கதிர்களைக் கொணர்வித்துப், பாரியையும் அவன் படையையும் காத்தமையையும் திதியனோடு சண்டைசெய்த அன்னி மாண்டகதையினையும், கரிகாற் பெருவளத்தானென்னும் அரசன், தானிழந்த அரசுரிமையை மறுபடியும் கிடைக்கப்பெற்ற

---

* இவ்வியாச மெழுதுவதற்குச் சேதுசமஸ்தான வித்வான் ஸ்ரீமத் உ.வே.ரா.இராகவையங்காரவர்களாற் செய்யப்பட்ட அகநானூற்றாராய்ச்சிக் குறிப்பு மிக உபகாரமாயிருந்தது. அன்னாரின்னு மரியபெரிய பழங்காவியங் கட்குரை எழுதி வெளிவிட நீண்ட ஆயுளையும் செல்வத்தையுங் கொடுக்கும்படி எல்லாம் வல்ல விறைவனைப் பிரார்த்திக்கின்றேன். கீரரென்று சொன்னால் நக்கீரர் ஒருவரையேகுறிக்குமென்று கூறும் சங்கநூலாராய்ச்சி இல்லாதவர்க்கு வெளிப்படுத்துவான் கருதி இவ்விஷயம்எழுதலாயிற்று.

வாலாற்றினையும் பசும்பூட் பாண்டியன் கொங்கரை ஓட்டியதையும் பற்றி மிக அழகாகப் புகழ்ந்துள்ளார்.

2. அந்திலிளங்கீரனார்:—இவரது இயற்பெயர் இளங்கீரன் என்பது. இவரதூர், அந்தியூர். இவர்மாலைக்காலத்தைக் கற்றோர் மனது கசியும்படி மிகச்சுவைபலபட வருணித்திருக்கின்றார். இவர் அக நானூற்றில் 71-வது செய்யுள்பாடியுள்ளார்.

3. இடையனெடுங்கீரனார்—இவர் இடைக்குலத்தினர். இவர் வேளூர்வாய்த் தெய்வத்தையும் காவிரி வெள்ளத்தில் நீர் விளையாடற் சிறப்பையும் புகழ்ந்துரைத்துள்ளார். அகம் 166—வது பாட்டு இவர் பாடியது.

4. இம்மென்கீரனார்:-கீரனாரென்பது இவரதியற்பெயர். இவர் ஆரியாது இமயமலையை மிகப்புகழ்ந்து கூறியுள்ளார். அக நானூற்றில் 398-வது பாட்டு இவர்பாடியது. நம்மோன்செய்த கொடுமைக்கிம்மென்றலமரன் மழைக்கண்டெண்பனிமல்க என்புழி இம்மென்று கூறியது நோக்கி இம்மென் கீரனெனப்பட்டார் போலும்.

5. உவர்க்கண்ணூர்ப் புல்லங் கீரனார்:—இவர்தந்தை பெயர் புல்லன் என்பது. கீரர் என்பதியற்பெயர். இவர் அகநானூற்றில் 146-வது பாட்டுப்பாடியவர்.

6. எயினந்தைமகனார் இளங்கீரனார்:—இவர் வேடர்குலத்திற்பிறந்தவர். (எயினன் + தந்தை = எயினந்தை) (எயினர்—வேடர்) இவர் மூம்பியாற் செய்த மூங்கிற்றுளையில் மேல் காற்றுப்பட அதனாலுண்டான வொலி ஆயர்குழலொலிபோல் ஒலிக்குமென்று சுவைபடக்கூறியிருப்பதும், வேள்விக்குண்டத்தின்கீழ் ஆமையைவைத்துமூடும் வழக்கினை வருணித்திருப்பதும் வியப்பைத்தரும். அகநானூற்றிலிவர்பாடிய பாக்கள் ஒன்பது. இவர்பாடிய பாக்கள் பாலைத்திணையைப் பற்றியனவேயாம்.

7. பொருந்திலிளங் கீரனார்:—இவர் பொருந்திலென்னுமோரூரிலுள்ளார். இளங்கீரன் என்பது; இவரது இயற்பெயர். இவர் அகநானூற்றில் 19, 351 ஆகிய இரண்டு செய்யுட்கள் பாடியுள்ளார். தலைமகன் தலைமகளை நினைந்து இரங்கிச் சொல்லுவதாகச் செய்த மேற்கூறியவிரண்டு செய்யுட்களும்இன்சுவை தருவனவாகும். இவர் கணவனைப்பிரிந்த மகளிர் சுவரில் கோடிட்டு நாளெண்ணும் வழக்கத்தையும் பல்லிசகுனங் கேட்கும் மாபினையும் மிகவழகுபட வருணித்திருக்கின்றார்.

வேம்பத்தூர்—பி. பாஸ்கரையர், தமிழ்ப்பண்டிதர்.

---

*தனிப்பாடற்றிரட்டு.

வேம்பத்தூர் மகாஜனங்களுக்கு
வேம்பத்தூரைக் குலசேகர பாண்டியனிடத்தில்
தானம் வாங்கிக்கொடுத்த ஸ்ரீமஹாகணபதி இரண்டாயிரத்தெட்டு
விநாயகர்பேரிற் கூறிய கவி.

வெண்பா.

எவ்வினையுந் தீர்த்தா லிரண்டா யிரத்தெட்
டுவிநா யகனைமனத் துன்னிக்—கவிபாடிச்
செங்கைகுவித் துக்குட்டிச் சிந்தித்தாற் சீர்மார்பார்
தங்கைமனை தேடிவருந் தான். (1)

வேம்பத்தூர் உத்தமி மீனாக்ஷி அம்மன் மீது பாடிய கவி.

கட்டளைக்கலித்துறை.

சித்தரு முப்பத்து முக்கோடி தேவருஞ் சிந்தைசெயும்
பத்தரும் போற்றுநிம் பாபுரி மேவிய பைங்கிளியாம்
உத்தமி யாகிய மீனாக்ஷி யைத்துதித் தோர்கட்கெல்லாம்
வித்தமுஞ் செல்வமுண் டாமெம னார்பய நோதலின்றே. (2)

இராமநாதபுரம் ஜமீன் மானேஜரும் கொடையாளரும் தமிழ்க்கலை விநோதரும் மதுரைத் தமிழ்ச்சங்கம் ஸ்தாபித்த பாண்டித்துரைத் தேவரவர்கள் தந்தையும் தமிழ்க்கலை விநோதரும் சங்கீத சாஹித்ய வல்லுநரும் கொடையாளருமாகிய பொன்னுச்சாமித் தேவரவர்கள் முதல் பேட்டியில் "துலையிருந்த பொன்விலைவைத்து" என்னும் சமஸ்தி கொடுத்தபோது பாடியது.

---

*இஃது இராமநாதபுரம் சிவகங்கை என்னும் உபய சமஸ்தான வித்வானும், வேம்பத்தூர்ச் சங்கவித்வான்களி லொருவரும், இராமநாதபுரம், பாரிவள்ளலெனப் பேர்பெற்ற ஸ்ரீ பாஸ்கரஸேதுபதி மஹாராஜா அவர்களால் கொடுக்கப்பட்ட சிலேடைப்புலி என்ற பட்டம் பெற்றவருமாகிய பிச்சுவையரவர்களால் பாடப்பட்டது.

வெண்பா.

கொண்டொடிப்பார் தம்மைமணங் கூடுவதென் றென்றுமத
கண்டத்தான் மிக்க கலங்கினாள்—பண்டு
சிலையிருந்த திண்டோள் செனகன்வா ழூம்மி
துலையிருந்த பொன்விலைவைத் து.

கருத்து:—மிதிலாபுரியிலே செனகனிடத்துள்ள பொன்மய மான வில்லை யார் ஒடிக்கிறார்களோ அவர்க்கே மணமாலை யிடுவது என்று சீதாபிராட்டி மதமயக்கத்தால் கலங்கினாள் என்பது.

இராமநாதபுரம் இரண்யகர்ப்பயாஜி ரவிகுல முத்துவிஜய ரெகுநாத ராஜமான்ய ராஜ ஸ்ரீ முத்துராமலிங்க சேதுபதி மஹாராஜா அவர்கள் திருக்குமாரரும், ஆயுந்தமிழினும் போரினும் பாரிலகத்தியனுஞ் சேயும்புகழ் கல்வியாளரும், வானைச்சுரபியைச் சிந்தாமணியை மந்தாரமென்னும் கானைப்பொரு கொடையாளரும், இயலைத்தலை பெற்ற முத்தமிழ்வாணர்க் கெழுமடங்கு புயலைப்பொருவு கையாளரும், காக்குங் கருணையுங் கவிமதுரவாக்குந் தழைத்தவரும் பன்னூர் தமிழ்ப் பயிர் வாடாது மாரியிப்பாரின் முத்தும்பொன்னுஞ், சொரிகின்றவரும், எமதன்னதாதாவும், தற்போது ஆட்சிபுரியும், யாழுங் குழலும் பசுந்தேனும் பாகுமிசைந்து குடிவாழுந் திருமொழியாளரும், கீதங்குழல் கஞ்சம் வீணை தடாரி கிளர்ந்த பஞ்சநாதங் கற்றவரும், பாரேழ் கழனியும் வாடாது தன்மப்பயிர் விளைக்கும் காரேயனைய கொடையாளரும், எம்மைப் பரிபாலிப்பவருமாகிய ஸ்ரீ இராஜராஜேஸ்வர ஸேதுபதி மஹாராஜா அவர்கள் தந்தையாருமாகிய மாட்சிமை தங்கிய ஸ்ரீ பாற்கரசேதுபதி மஹாராஜா அவர்கள் சமூகத்திலவ்வப்போது கூறிய கவிகள்.

வெண்பா.

எத்தியேத் திக்கலைக ளெல்லாந் தெரிந்தாலும்
நாத்திவச னந்தெரியா நாவோனே—மாத்திகழும்
சீர்த்தரா வுன்றன் றிருமுகத்தை யந்தொருக்காற்
பார்த்தாலும் போமே பசி.

மற்ருேரமையம்.

மஹாராஜா அவர்கள் செனித்த விசேஷங்கூறிய கவிகள்,

வெண்பா.

ஆலயஞ்சீ ராமா வரும்புலவோர் வாழ்வாரா
தாலமெலாந் தன்மந் தழைக்குமா—சீலமெனுஞ்
சாந்தகுணச் சேதுபதி தம்மாபிற் பாற்கானும்
வேந்தன் பிறவா விடில்.

வெண்பா.

செய்யமுத்து ராமலிங்க சேதுபதி செய்தவமோ
வையகத்தோர் முன்செய்த வப்பயனோ—மெய்யுளத்தார்
ஈாமானும் பூமானு நண்ணிவளர் பாற்கானுஞ்
சீமானிங் கேசெனித்த தே.

ஷை மஹாராஜா அவர்கள் 1-மணி நேரத்தில் வித்துவான்களாற் கொடுக்கப்படும் 12 சிலேடைகள் யார் பாடுகிறார்களோ? அவர்க்குத்தக்க பரிசளிக்கப் படுமென்று சபையில் பிரஸ்தாபிக்க உடனே இவரே, கொடுத்த 12 சிலேடைகளையு மதிவிரைவிற் பாடி நிமிஷகவி என்ற பட்டமும், ஐயாயிரரூபாவும் பெற்றபோது கூறிய கவி.

கட்டளைக்கலித்துறை.

தங்க மலையைப் பவுனுக்கிச் சங்கரன் சார்கிரியைத்
துங்கம் பொருந்திய ரூபாய தாக்கிச் சொரிந்திடினுந்
திங்கட் குடைதங்கு பாற்கர பூபன் செழுங்கமலச்
செங்கைக் கிவைபற்று மோகண நேரச் செலவினுக்கே.

ஷை மஹாராஜா அவர்கள் ஐயாவர்களைப் பார்த்து தங்கமலையும், வெள்ளிமலையும் கூடக்கணநேரச் செலவுக்குக்காணுதென்றீரே இன்னும் பணம் வேண்டுமேயெனப் பாடியகவி.

சீலத் தவமறை யோர்கள் வருண செபஞ்செயினுங்
கோலக் கருமுகில் பெய்யும் பெய்யாது குகனையெண்ணிப்
பாலத்தி னீறணி பாற்கா சேது பதிகைமுகிற்
ருலத்தி லெந்தச் சமையத்தும் பெய்யுந் தனமழையே.

ஷை மஹாராஜா அவர்களிடத்தில் வந்தவர்கள் எல்லாரும் கர்னனுயிருக்க யான் மாத்திரம் வெறுங்கன்னனுயிருப்பேனுவென்று பாடியகவி.

வெண்பா.

காவலர்கொள் ளச்சீர்க் கவிஞர்க்கும் வந்துபணி
காவலர்க் குஞ்சேவ கர்க்குந்த—மாவனு மூங்
கன்னனெனச் சொல்பாற் காவேந்தே யென்னைவெறுங்
கர்னனெனப் பார்ப்பதழ கா.

(கர்னம்—காது) (உடனேகொடுத்தனர்)

மற்றோரமையம் கூறியகவி.

வெண்பா.

பாரி கொடையுமற்றப் பாராள்வோர் செந்தமிழ்க்கு
வாரி யளித்தவுயர் வண்கொடையும்—வீரியமா
வாயுங் கலையி லகத்தியனும் பாற்காமா
லீயுங் கொடைக்கீ டிலை.

மற்றோரமையம் ஷை திருத்தகு செல்வன் கொடுத்த கொடையைப்பற்றி மற்றோர் புகழவேண்டாது அவர்களது கொடைப் பொருளே சிறப்பித்துக் கூறுமெனப் பாடியகவி.

கட்டளைக்கலித்துறை.

தாதிற் சிறந்திடு பாற்கா ராஜன் றருங்கொடையைக்
காதிற் சிறந்திடு பொன்னூர் வயிரக் கடுக்கன்சொலும்
மீதிற் சிறந்திடு பீதாம் பரஞ்சொலும் மேன்கலையின்
வாதிற் சிறந்திடு தோடா முடுகு வளைசொல்லுமே.

முற்காலத்தில் அக்ஷரலக்ஷம் கொடுத்தான் போஜராஜனென்றுசொல்லக் கேட்டதேயன்றிப் பிரத்யக்ஷத்திற் காணவில்லை. இப்பொழுது மஹாராஜா அவர்கள் கொடை போசன் கொடைக்கு எண்மடங்கு அதிகமென்று சிறப்பித்துக் கூறியகவி.

வெண்பா.

அந்நாளிற் போச னளித்ததனை யாரறிவா
ரிந்நாளிற் போசனினு மெண்மடங்கென்—றெந்நாளும்
பாவலவர் கொண்டாடும் பாற்காபூ பாமற்றக்
காவலவர் நிற்கிணையா கார்.

தசரா உத்ஸவத்தில் முகவை இராஜராஜேஸ்வரிமேற் கூறியகவிகள்.

எழுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

மலரினை யெடுத்து மாலையாத் தொடுத்து
மறைதுதி சாணில்வந் தடுத்துப்
பலதாஞ் சாதிப் பணிந்துனை யேத்திப்
பணிவதெந் நாளறு காதி
சலமதி டொருந்து சம்புபா லிருந்து
தழைத்திடுந் தென்குலக் குருந்தே
விலகுறு சடையாய் முகவைவாழ் கொணடையா
யிராஜரா ஜேஸ்வரி யுமையே. (1)

மதியெலா மலைந்து மதன்கணைக் குலைந்து
மாதர்பாற் றினந்தொரு மலைந்து
கதியினை மறந்து விதியினை யிழந்து
கற்பெனுங் கதவினைத் திறந்து
பதிதனு யோடிப் பதைத்துடல் வாடிப்
படுந்துயர் தீர்த்தருள் கோடி
யெதிகளுந் துதிசெய் பதிபெறு முகவை
யிராஜரா ஜேஸ்வரி யுமையே. (2)

பாடிட வறியேன் பதிதனுன் சிறியேன்
பதமலர் கனவிலுங் குறியேன்
நீடிய மானே நிகர்விழித் தேனே
நின்னையஞ் சலித்தன ஞனே
கூடிய குழலாய் கொற்றமின் கழலாய்
கூறிய தர்ப்பரை யாய
வீடிலா மக்மேர் கூடுகா முகவை
யிராஜரா ஜேஸ்வரி யுமையே. (3)

கானகத் தோடிக் கவலையாய் வாடிக்
கனிகிழங் காதிகள் தேடிப்
பானநீ ரருந்திப் பசியினுல் வருந்திப்
படர்தவ முயற்சியே புரிந்து

ஞானமே விட்டு நடலைபோய் விட்டு
நண்ணுபுண் ணியர்தமக் கருள்செய்
யேனமா வரியின் பானவர் முகவை
யிராஜரா ஜேஸ்வரி யுமையே. (4)

சந்திரா னனியே தனித்தவிற் பனியே
தயவுறுங் கற்பகக் கனியே
செந்தில்வாழ் குகனைத் தந்திமா முகனைச்
செனித்திடச் செய்யான் பனியே
பந்தியார் நெடிய கந்தியார் முகவைப்
பதியினே யெமக்கருள் செயச்சொல்
இந்திரா தியர்கள் வந்தனு திகழ்செய்
யிராஜரா ஜேஸ்வரி யுமையே. (5)

மகாராஜா அவர்கள் இராஜராஜேஸ்வரிபேரிற் செய்யுளொன்று சொல்லித் துதித்துவிட்டு ஐயாவர்களே பாட்டு நன்றாயிருக்கிறதா வென்றுகேட்க அப்போது கூறிய கவி.

கலித்துறை.

காவிற் சிறந்தது கற்பகக் காவர்ச்ச கர்க்குதவு
பூவிற் சிறந்தது தாமரைப் புட்பமுன் போற்றுகின்ற
தேவிற் சிறந்த திராஜேஸ் வரிக்குமுன் செய்புலவர்
பாவிற் சிறந்தது பாஸ்கர சேது பதிகவியே.

மற்றோசமையம் மஹாசபையில் வித்வான்களை முன்னிலைப் படுத்திக் கொடை விசேஷம் கூறிய கவி.

வெண்பா.

காய்ப்போய் மாத்திற் கனிக்கலைவார் போற்பிறர்பாற்
போய்ப்போய்க் கவிசொல் புலவீர்காள்—தேய்ப்போயா
சந்தனஞ்சவ் வாதணிபுஞ் சாமியெங்கள் பாற்கரனைச்
சிந்தைசெய்தாற் கிட்டுந் தினம்.

சம்பகமாலினி.

(273-ம் பக்கத்தொடர்ச்சி)

4-வது அத்தியாயம்.

இடம்—ஜெயசிம்மன் வீடு.
பாத்திரங்கள்—ஜெயசிம்மன், பிரஹ்நளை.

ஜெயசிம்மன் வீற்றிருக்கின்றான்.

ஜெய—முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படுவதுபோல், நான் வீண் ஆசையுறுகின்றேன். ஏதோ நல்வசத்தால் அரசன் என் மீது அன்புகூர்ந்து சைனியத்தில் ஓர் உயர்ந்த பதவியை எனக்கு அளித்திருக்கிறான். அத்துடன் நான் மனமாறாது இன்னும் கைக்கெட்டாப்பொருளை அடைய விரும்புகின்றேன். வீணெண்ணம் இவ்வாறே ஒவ்வொருமுறையும் நினைத்து தீர்மானங்கொள்ளினும் அடிக்கடி அதைப்பற்றியே என்மனம் சாருகின்றது. என்? ஒரு நிமிஷமேனும் அவளை மறக்க என்னால் முடியவில்லை, அவளது உருவம் என்கண்முன்னே நின்று என்மனோரதத்தைக் கலங்கச்செய்கின்றது. அவளோ இத்தேசத்தையாளும் அரசனது குமாரி. நான் ஒரு சாதாரண வீரன். அப்படியிருக்கையில் எவ்வாறு என் எண்ணம் நிறைவேறும். அரசன் இதையறிந்தால் இப்பொழுது நானடைந்திருக்கும் உத்தியோகத்தினின்றும் விரட்டி விடுவான். ஊர் பேரறியாத என்னைப்போன்ற எளியனுக்கு ஓர் அரசகுமாரி கிட்டுவது எங்ஙனம்? அதற்கு அரசனும் சம்மதிப்பானோ? தவிரவும் தனக்குப்பின் ஓர் ராஜகுமாரனுக்கு வகிக்கத்தக்க குமாரியை விவாகம் செய்ய எண்ணியிருக்கின்றான். அரசகுமாரியோ எனக்குக் கிட்டாப்பொருள். என்பேரில் அவள் ஏன் காதல்கொள்ளவேண்டும்? உலகவியல்புக்கு மாறாக நான் எண்ணுவது தகுதியோ? ஆகையால் இதைப்பற்றி நான் வீணே மனச்சஞ்சலமடைவதன்றி யாதும் பயனிலது; இவ்வெண்ணத்தை அறவொழிக்கவேண்டும்.

[பிரஹ்நளை வருகின்றாள்.]

நண்பரே! நண்பரே!! ஜெயசிம்ம! நான் எவ்வளவு முயன்றும் என் திட்டசித்தம் நிலைபெற வில்லையே.

பிரஹ்நளை—ஜெயசிம்மரே!

(ஜெயசிம்மன் பிரஹ்நளையை நோக்குகின்றான்.)

ஜெயசிம்—அம்மணி! என்னை அழைத்தீர்களா?

பிரஹ்நளை—ஆம் அதிக சிந்தாக்ராந்தராய்த் தோன்றுகின்றீர்கள்.

ஜெயசிம்—ஒன்றுமில்லை.

பிரஹ்நளை—ஒன்றுமில்லையா? ஏன் என்னிடத்தில் மறைக்கின்றீர்கள்?

ஜெயசிம்—இல்லை அம்மணீ களைப்பினால் சற்று ஆயாசமாக விருந்தது வேறொன்றுமில்லை.

பிரஹ்நளை—ஏன் என்னிடம் பொய்யுரைக்க வேண்டும்?

ஜெயசிம்—உண்மையாக களைப்புமேலிட்டு அசைவற்று உட்கார்ந்திருந்தேன்.

பிரஹ்நளை—அல்ல அல்ல நான் உம்மை இருமுறை அழைத்தும் உங்கள் செவியில் படவில்லை. மனமொன்றை நோக்கச் செவியொன்றை நோக்குமோ?உமது எண்ணத்தை நானறிவேன்.உண்மையை என்னிடம் கூறலாகாதா.

ஜெயசிம்—நான் எதைக்கூறுவது? உண்மையைத்தான் கூறுகிறேன்.

பிரஹ்நளை—நான் தெரிவிக்கின்றேன். நீர் காதல்கொண்டீர். ஏன் திடுக்கிடவேண்டும்?

ஜெயசிம்—அம்மணி!

பிரஹ்நளை—நான் கூறியது வாஸ்தவமென்று ஒத்துக்கொள்ளுங்கள். உமது மௌனம் என்வார்த்தையை மெய்ப்பிக்கின்றது.

ஜெயசிம்—என்னைச் சோதிக்கவேண்டாம் அம்மணீ!!

பிரஹ்நளை—இனிமேல் அவ்வார்த்தையை மறந்துவிடுங்கள்.

ஜெயசிம்—அதிருக்கட்டும். நான் காதல்கொண்டேன் என்று யாதுகாரணம்பற்றிக் கூறினீர்கள்.

பிரஹ்நளை — என்னைப்போன்ற ஸ்திரீஜாதியின் கண்களின் கூர்மை அச்சக்தி வாய்ந்தது. மற்றும் இதுகாறும் உங்களுடன் பழகியபின் நான் அதை வெகு சுலபமாய் அறிவேன்.

ஜெயசிம்—அம்மணீ!

பிரஹ்நளை—அதை நீங்கள் மறக்கவேண்டுமென்று கூறினேனல்லவா? ஏன் அம்மணி அம்மணீ என்று அழைக்கவேண்டும்.

ஜெயசிம்—ஆனல் நான் உங்களை எவ்வாறழைப்பது?

பிரஹ்நளை—அதைக்குறித்தென்ன இப்பொழுது வேறு எவ்வாறேனும் என்னைக்கூப்பிடுங்கள். அதிருக்கட்டும் உமது காதலியை நீங்கள் எவ்வாறு அழைப்பீர்கள்?

ஜெயசிம்—அதைப்பற்றி என்ன?

பிரஹ்நளை—நான் கேட்கலாகாதா?

ஜெயசிம்—ஒன்றுமில்லை. நீங்கள் கூறியவாறு நான் என் மனத்தை அடக்கச் சக்தியில்லாது கவலையுற்றிருக்கின்றேன். நீங்கள் ஏன் அதைப்பற்றிக் கவலையுற வேண்டும்?

பிரஹ்நளை—நீங்களவ்வாறு கூறலாகாது. உங்களுடன் சேர்ந்து வசிக்கும்வரை உங்களுக்கு நேரும் சுகதுக்கங்கள் என்னையும் ஒருவாறு சாரும். ஆகையால்தான் நான் உங்களைக் கேட்கத் துணிந்தேன்.

ஜெயசிம்—அப்படியாயின் நான் யாதுரைக்கவேண்டும்?

பிரஹ்நளை—உங்கள் மெய்க்காதலியுடன் சம்பாஷிக்கும் காலையில் அவளை எவ்வாறு அழைப்பீர்களோவென்று வினவினேன். அதற்கு உத்தரம் வேண்டும்.

ஜெயசிம்—அவளது பெயர்கொண் டழைப்பேன்.

பிரஹ்நளை—நன்றாய் இருந்தது. உங்கள் சகோதரியா இருந்தால்?

ஜெயசிம்மன்—அவளையும் அவள் பெயர் சொல்லிக் கூப்பிடுவேன்.

பிரஹ்நளை—அப்படியிருக்க ஏன் என்னை பிரஹ்நளை என்று அழைக்கலாகாது.

ஜெயசிம்மன்—எங்ஙனம் அவ்வாறழைக்க இயலும்?

பிரஹ்நளை—எந்தமுறையிலேனும் சரி. என்னை சகோதரி என்றுவது அல்லது காதலி என்றுவது நினைத்து என்னை பிரஹ்நளை என்று கூப்பிடவேண்டும். அறிந்தீர்களா?

ஜெயசிம்மன்—உன்னைச்சகோதரியாகப் பாவித்து பிரஹ்நளை என்றழைக்கிறேன்.

பிரஹ்நளை—நீங்கள் என்னை எவ்வாறு எண்ணி அழைத்தாலும் நான் அதைப்பற்றிக் கருதேன். சரி இப்பொழுது என்னை எவ்வாறு அழைப்பீர்கள்?

(ஜெயசிம்மன் கொஞ்ச மௌனமாயிருக்கின்றுன்.)

ஓகோ இதில் என்ன கஷ்டமிருக்கிறது. என் பெயர் அவ்வளவு கசப்பாக விருக்கின்றதா?

ஜெயசிம்மன்—இல்லை. உனக்கேன் அதில் அவ்வளவு சந்தோஷம்?

பிரஹ்நளை—அதை நானல்லவோ அறிவேன். கூறுங்கள். என் மனதிற்கு இன்பம் தாருங்கள்.

ஜெயசிம்மன்—பிரஹ்—பிரஹ்நளை,

பிரஹ்நளை—அப்பா என்ன சிரமம். நீங்கள் காதல்கொண்டிருப்பவர்போல் தோன்றவில்லையே? ஒருவன் குற்றம்செய்யத் துணிந்த பின் அக்குற்றத்தைச் செய்யுங்கால் அவன் மனம் தடுமாறுவது போல நீங்கள் என் பெயரை யிட்டழைக்கத் தடுமாறுகிறீர்கள்.

ஜெயசிம்மன்—அம்மா!

பிரஹ்நளை—மறுபடியும் ஆரம்பித்தீர்களா! அம்மாவென்றும் அம்மணியென்றும் ஏன் என்னை அழைக்கவேண்டும்? நான் உங்களைப் பத்துமாதமாக வயிற்றில் சுமந்து பெற்றுவளர்த்த அன்னையா? நான் எத்தனை நாள் உங்களுக்குப் பாலூட்டித் தாலாட்டினேன். கூறுங்கள். அவ்வித பாந்தவ்யம் நம் இருவருக்கு மில்லாதிருக்க

என்னை அம்மாவென்று அழைப்பது தகுதியோ? உங்களுடன் வசிப்பதற்கு மனமில்லைபோலும்? அவ்வாறு நீங்கள் எண்ணும்பக்ஷத்தில் நான் யாதொரு ஹிம்சையையும் கொடுக்காமல் உங்களைவிட்டுச் செல்கிறேன்.

ஜெய—பிரஹ்நளா! என்னை மன்னிக்கவேண்டும். உன்னால் எனக்கு ஒருசங்கடமும் ஏற்படுவதில்லை. நான் உன்னை இனி பிரஹ்நளா என்றே அழைக்கின்றேன்.

பிர—ஐயோ உங்களுடைய உதவியைக்கொண்டே நான் இடர் நீங்கி உயிருடன் இவ்வுலகில் வாழ ஏற்பட்டது. அந்த நன்றியை மறந்து நான் தவறாகப்பேசினேன். ஆகையால் என்னை நீங்கள் மன்னிக்கவேண்டும்.

ஜெய—பிரஹ்நளா! உன் மனம் வருந்தக்காண நான் சகியேன். அதிருக்கட்டும். சற்று முன்பு நான் காதலுற்றதாகக் கூறினாய். அப்பெண்மணி யாரென்று உன்னாலுரைக்க முடியுமா?

பிர—நான் அதை நன்கறிவேன். ஆனால் உங்கள் மனோபீஷ்டம் ஒருவாறும் நிறைவேறாது. எட்டாப் பழத்திற்குக் கொட்டாவி விடுவது போலல்லவா இருக்கின்றது?

ஜெய—(தனக்குள்) நானும் அவ்வாறே நினைத்தேன்.

பிர—அவ்விதமிருக்க ஏன் அவளை நினைந்து வருந்தவேண்டும்? உங்கள் நிலைமைக்குத் தகுந்த ஓர் ஸ்திரீயை விவாகம் செய்துகொண்டு இன்பமாகக் காலம்கழிக்கலாம்.

ஜெய—இருவர் மனமொப்பி விவாகம் செய்துகொண்டாலன்றி இன்பம் எவ்வாறு அனுபவிக்க இயலும்? என்னையொருவள் காதலின் றிருக்கணவனாகப் பெறின் எனது குணத்தையும் மனதையும் அவள் எவ்வாறு அறிவாள்?

பிர—உண்மையாக ஒருவள் உங்கள்மீது இச்சைகொண்டு உங்களை விவாகம் செய்ய எண்ணினால்?

ஜெய—என்னை விரும்பி மணம் செய்துகொள்ள ஸ்திரீயும் உண்டோ?

பிர—இருப்பின் நீங்கள் அவளை மணந்துகொள்ளுகிறீர்களா?

ஜெப—உனக்கும் பதில் அளிக்க என்னால் முடியவில்லை. நீ கூறியபடி என்னை ஒருவன் இச்சிக்கும்படி கேட்டாலும் நான் காதல் கொண்ட பெண்ணை மறந்து அவளை எவ்வாறு மணக்க என் மனம் சம்மதிக்கும்?

பிர—நானே உங்களைக் காதலிப்பதாக நாம் எண்ணுவோம். அப்பொழுது நீங்கள் என்னை மறுதலித்து விடுவீர்களோ? பிராணநாதா! நான் இதுகாறும் உரைத்த மொழிகளைக் கிஞ்சித்தேனும் அறியாதவர்போல் ஏன் பாசாங்கு செய்கின்றீர்கள்? அன்று காட்டில் நான் உங்களைக் கண்டதுமுதல் உங்கள்மீதுள்ள அன்பு மிகுந்து காதல் பெருகிற்று. அப்பொழுதே உங்களை எனது கணவனாக நான் வரித்துவிட்டேன். ஆனால் அதை வெளியிட பல தடவைகளில் முயன்றும் பெண்பாலுக்குள்ள நாணம் அதைத் தடுத்தது. இன்று என்னையும் மீறி உங்களிடம் நான் என் காதலைத் தெரிவிக்கலாயிற்று. இனி என்னால் சகிக்கமுடியாது. என் மனதிற்கிணங்கி என்னை உங்கள் மனைவியாக ஏற்றுக்கொள்ள வேண்டும் பிராணநாதா!

(இவ்வார்த்தைகளைக் கேட்டு ஜெயசிம்மன் பிரமித்திருக்க, அவனை நெருங்கி பிரஹ்நளை அவன் பக்கத்தில் உட்காருகின்றாள். அவன் உடனே அவளைவிட்டு வருகின்றான்.)

(தனக்குள்) ஆஹா என்ன ஆச்சரியம்! வெளிப்படையாய்.

ஜெப—பெண்ணே வேண்டாம். இது தகுதியல்ல.

பிர—ஏன் தகுதியல்ல? நான் உங்களுக்குத் தக்க மனைவியல்லவா? உங்களுடைய காதலிக்கு நான் எவ்வாறு தாழ்ந்தவள்?

ஜெய—அதைப்பற்றி நீ ஒன்றும் கூறவேண்டாம். என் மனதை நீ முழுவதும் அறிந்த பின்னர் இவ்வாறு பேசுவது தகுதியல்ல. உன்னை நான் மனைவியாகக் கொள்வது அசாத்தியம்.

பிர—அவ்விதம் நீங்கள் உரைக்கலாகாது. நான் உங்களைக் காதலிக்க மற்றொருவள் உங்கள் மீது இச்சைகொள்ள முடியுமோ? வேண்டாம். எனது பிராணநாயகனாகவிருக்கச் சம்மதியுங்கள்.

ஜெய—வீணாகப் பிதற்றவேண்டாம். உன்னை நான் விவாகம் செய்துகொள்ள முடியாது.

பிர—அப்படியா அதைப் பார்க்கின்றேன்.

(ஜெயசிம்மன் கையைக் கெட்டியாய்ப் பிரஹந்நளை பிடித்துக் கொள்ளுகின்றாள்.)

இப்பொழுது என்ன செய்வீர்கள்? என் எண்ணத்தைப் பூர்த்தி செய்யும்வரை உங்களை நான் செல்லவிடுவதில்லை. இது நிச்சயம்.

[ஜெயசிம்மன் திமிறி அவள் கையினின்றும் விடுவித்துக் கொள்ளுகின்றான்.]

ஜெய—பிரஹந்நளை இதுவரை என்னுடன் நீ விளையாடியது போதும். இனி அத்தகைய தகாதவார்த்தைகளைப் புகன்றால் நான் உன்னை விட்டகலவேண்டிவரும்.

பிர—உங்களுக்குக் கொஞ்சமேனும் என்பேரில் இரக்கமில்லையா? உங்கள்மனம் கல்லா? ஓர் ஸ்த்ரீ, தனது நாணத்தையும் துறந்து உங்களைச் சரணமென்றடைந்தால் இவ்வாறு அவளைத் திரஸ்கரிப்பது உங்களுக்கழகாகுமோ? இதுதான் ஓர் வீரனுடைய குணமோ? வேண்டாம். நான் உரைப்பதைச் சற்று அமைதியுடன் கேட்கவேண்டும். நான் கலிங்கதேசத்து முதல் மந்திரியின் மகள் என்று முன்னமே கூறியிருக்கின்றேன். ஆகவே நீங்கள் என்னை மணம்புரிவதால் உங்கள் நிலைமைக்கு யாதொரு இழிவும் ஏற்படாது. தவிர உங்கள் பதவிக்குத் தக்கபடி என்னைக்காட்டிலும் மேன்மையுள்ள ஓர்மனைவியை அடைய எண்ணுவது வீண். நான் தங்கள் மீது கொண்டிருக்கும் காதல் அளவுக்கு மிஞ்சியது. ஆகையால் வீண் மனோராஜ்யம் செய்யாமல் கிட்டுவதைச் சந்தோஷத்துடன் ஆதரித்து என்னையங்கீகரித்தல் வேண்டும்.

ஜெய—ஆஹா என்ன சங்கடம்! பிரஹந்நளை! வேண்டாம். வேண்டாம் வீணாக நெறிதவறி நடக்காதே.

பிர—நான் நெறிதப்பி நடந்துகொள்ளவில்லை. சாஸ்திரங்கள் அனைத்தும் நான் கூறுவதையே ஆமோதிக்கின்றன. முற்காலத்தில் அர்ச்சுனன் இந்திரலோகம் சென்றபொழுது ஓர் நாள் தனித்திருக்கையில் மேனகை அவன்பேரில் மோகம்கொண்டு தன்னுடன்

சேரும்படி அவனை வேண்டவில்லையா? அப்பொழுது அர்ச்சுனன் அவளது கருத்துக்கிசையாமல் மறுத்தபொழுது அவள் யாதுகூறினாள்? ஓர் ஸ்திரீ காதலின் பெருக்கால் ஓர் பூமானைச்சேர வற்புறுத்தினால் அவன் அதற்கிசைவது சாஸ்திர விரோதமில்லை என்று கூறவில்லையா? அதைக்கேட்டும் அவன் மனம் இசையாததால் அவன் சாபத்துக்குள்ளாக வில்லையா? மேனகை சாஸ்திரங்களுக்கு விரோதமாக நடந்திருந்தால் அவள் சாபம் எவ்வாறு சித்தித்திருக்கக்கூடும்? ஆகையால் இவைகளறிந்த நீங்கள் ஏன் வீணுகச்சந்தேகம் கொள்ளல் வேண்டும்?நான் கூறுவதைக்கேளுங்கள், பிராணநாதா? என் காதலரே! இன்னும் மனமிரங்கவில்லையா?

ஜய—இனி நான் இங்கிருக்கலாகாது (அவ்விடம்விட்டு செல்ல எத்தனிக்க, அவனை பிரஹ்நளை வழிமறிக்கின்றுள்.)

பிரஹ்நளை-நான் உம்மைப் போகவிடேன். என்னைஉங்களுடைய வாளால் கொன்றுவிட்டு அப்புறம் செல்லுங்கள். உலகத்தில் பிறந்து என் விதிவசத்தால் இதுவரை நான் அனுபவித்தகஷ்டம் போதாமல் இனியும் நான் கஷ்டம் அனுபவிக்கவேண்டுமோ? கொஞ்சகாலம் அற்பசந்தோஷத்தில் அமிழ்ந்திருந்தேன்.இனி எனக்குச் சுகமென்பதே கிடையாது. என்விதியை நீங்கள் தடுக்கமுடியுமா? நான் உயிரோடிருந்தாலென்ன, இறந்தாலென்ன? அதைப்பத்றி நீங்கள் கவனிக்கவேண்டாம். வெட்கத்தைவிட்டு உங்கள் மீது கொண்ட காதலை வெளியிட்டேன். ஆனால் நான் அதற்குத்தகுந்தவளல்ல வென்று. நீங்கள் உரைத்துவிட்டீர்கள். நாணம் இழந்த பிறகு நான் இந்த ஜென்மத்துடன் இருப்பதன் பயனென்ன? உயிர்விடுதலே என் மடமைக்குதக்க சிகிச்சையாகும். ஓரேவீச்சில் என் சிரசைக்கொய்துவிட்டு அப்புறம் செல்லுங்கள். ஏன் தாமதம் செய்கின்றீர்கள்?

ஜய—உன்னைக் கொலைசெய்து அதனுல்வரும் ஸ்திரீஹத்திதோஷத்தை நான் அடையவும் வேண்டுமா? ஒருக்காலும் உன் வார்த்தைகளை நான் மதியேன். நான் அரைகிமிஷமேனும் இங்கு தங்குவதில்லை—விலகிநில்.

பிரா—யாது கூறினீர்கள்? இவ்வுலகில் ஸ்திரீகளுக்கு நாணம், வெட்கம் என்ற முக்கிய பூஷணத்தை யார் கொள்ளைகொண்டவர்?

நீங்களல்லவா? அவ்வாறில்லாவிடில் ஏன் அன்று என்னைக்காப்பாற்றவேண்டும்?என்மானத்தைக் காப்பாற்றவெண்ணியே,என் தேசத்தைவிட்டு ஓடிவர நேர்ந்தது. ஆயினும் அன்று உங்களுடைய உதவியை நான் அடையாதிருந்திருப்பின் என் மானம் போகுமுன் உயிரிழந்திருப்பேன். மானம் இழந்து எதற்காக நான் உயிருடன் வாழவேண்டும்? இத்தனை காலம் நாமிருவரும் சேர்ந்து வசித்து வந்ததை அறிந்த ஜனங்கள் என்னை ஏழனமாக நினைக்கமாட்டார்களா? நான் உங்கள் மனைவி என்றும், நீங்கள் என்கணவனென்றும் அனைவரும் நம்பியிருக்கின்றார்கள். அப்படியிருக்க என்னைத்தனியேவிட்டு நீங்கள் சென்று விட்டால் எனக்கு நேரிடும் அவதூறுகளை எண்ண எனது உடல் நடுங்குகின்றது. நான் உங்களுக்கு வேசியாக இருந்தேன் என்று கடைசியில் வேறு ஸ்திரீயின் மீதுள்ள மோகத்தால் நீங்கள் என்னைவிட்டகன்றீர்களெனவும் உலகம் பழிக்கும். அவ்வசைச் சொல்லை நான் கேட்கச்சகியேன். ஆகையால் நீங்கள் அதன் முன்பு என் உயிரைப்போக்கிவிட்டு அப்புறம் அடிவைக்கலாம்.அதற்கு உங்களுக்கு இஷ்டமில்லையாயின் உங்கள் முன்பே நான் என் ஆவியைப் போக்குவிக்கின்றேன்.

ஜெயசிம்மன்—என்ன சாகசம் பெண்ணே! நான் உரைப்பதைச் செவி சாய்த்துக்கேள். நான் இச்சைகொண்ட பெண்ணைத் தவிர மற்ற எவரையும் விவாகம் செய்துகொள்ள மாட்டேன். இது சத்தியம்.

பிர—அப்படியாயின் என்கதி என்ன? இதன்பொருட்டா என்னைக் காட்டினின்றும் கூட்டிவந்தீர்கள்? இவ்வாறு நடக்கும் என்று நான் அறிந்திருந்தால் உங்களுடன் நான் வந்திரேன். ஆயினுமென்? நான் இனி உங்களிடம் அணுகுவதில்லை. இதுகாறும் வசித்து வந்த வண்ணம் நாம் இருப்போம். உங்களுடன் நான் பேசுவது இஷ்டமில்லை எனில் அதற்கிணங்கியே நடக்கின்றேன்.

ஜெய—நானும் அவ்விதமே எண்ணுகின்றேன். பிரஹ்நளே இதுவே நிச்சயம். அன்று காட்டில் உன் நிலைமையைக்கண்டு பரிதா

பங்கொண்டு உன்னை என்சகோதரியாகப்பாவித்துவந்தேன். இனியும் அவ்வாறே நீ என்னுடன் வசித்துவர எனக்குத் தடையில்லை. ஆனால் என்னைக்காதலனென்றும், கணவனென்றும் கூறித் தவறாக நீ நடப்பின் அன்றே உன்னை விட்டகலுவேன். அதை நிச்சயமாக நீ எண்ணவேண்டும். உனது சாகஸத்தால் என்னை வெல்லக்கூடும் என்ற எண்ணத்தையும் மறந்து விடு.

[ஜெயசிம்மன் செல்கின்றான்.]

பிர—ஹா! என் எண்ணங்களெல்லாம் வீணாயினவே! இதுவரை நான் கொண்டிருந்த தைரியமும், புத்திசாதுர்யமும் இவரிடம் செல்லவில்லையே! ஓர் ராஜரீக முழுவதையும் என் சுண்டுவிரலில் அமுக்கியாட்டிய எனக்கு ஓர் சாதாரண வீரனிடம் பயனற்றுப் போயதே. அவருடைய கட்டளைக்கு நான் தாழ்ந்திருக்கவேண்டி நேர்ந்ததே. இதற்கெல்லாம் இடையூறாக விருக்கும் ராஜகுமாரியே காரணமாக விருக்கின்றாள். இவனுக்குக் கண்ணில்லையா? என்னைவிட அவள் அழகிற் சிறந்தவளென்று எண்ணிய மூடனாகவிருக்கின்றான். என் பேரழகைக்கண்டு எனக்கடிபணியாதவர் கிடையாது. அப்படியிருக்க இவனொருவனே அதைக்கவனிக்கவில்லை. பார்ப்பதற்குப் பதுமைபோன்றிருக்கும், அரசகுமாரத்தியின் மீது காதல் கொண்டான். காதலின் உணர்ச்சியை யறிந்த என்னைக்கண்டு மயங்காமல் அவளையே சர்வல்யமும் நினைத்துக்கொண்டிருக்கின்றானே இருக்கட்டும். ஷண்பகமாலினி! இவனால் நீயும் இன்று முதல் எனக்கு எதிரியாகிவிட்டாய். இனி உங்களிருவருக்கும் சுகத்தைக்கெடுக்கும் சனியன் நானே! பிரஹ்நளை யென்றால் கலிங்கதேசம் முழுவதும் நடுங்கும். நீ அற்பஸ்திரி, உன் சாமர்த்தியம் என் முன் நில்லாது. பார்க்கின்றேன் உனது திறமையை.

5-வது அத்தியாயம்.

இடம்—அரண்மனைப் பூங்காவனம்.

காலம்—சாயங்காலம் சுமார் $4\frac{1}{2}$-மணியிருக்கும்.

பாத்திரங்கள்—ஷண்பகமாலினி, விமலாவதி முதலானோர்.

[ஷண்பகமாலினி தோழிகளுடன் வருகின்றாள்.]

ஷண்—விமலா! இன்று நந்தவனம் எவ்வளவு ரமணீயமாகத் தோன்றுகின்றது பார்த்தாயா? நாமும் தினந்தோறும் இப்பூங்காவனத்தின்கண் உலாவ வருவதுண்டு. அவ்விதமிருக்க இன்றுமட்டும் எல்லாம் எனக்குப் புதிதாகக் காண்கின்றன.

பரி—ஷண்பகம்! வஸந்தகாலம் ஆரம்பித்துவிட்டது. செ... ளெல்லாம் துளிர்விட்டிருக்கின்றன. புஷ்பச்செடிகள் புஷ்பித்து மணம் வீசுகின்றன.

ஷண்—இன்றுதான் வஸந்தகாலம் ஆரம்பித்ததோ! நீ உ... பது சரியான காரணமல்ல.

விமலா—அப்படியாயின்உங்கள்மனத்தில் விசேஷமாக உண்டாயிருக்கும் கிளர்ச்சியின் மிகுதியால் பார்த்தவைகளனைத்தும் அலங்காரமாகத் தோன்றுகின்றன போலும்.

பரி—அதுவும் தவிர மன்மதன் தன், சுய ஆட்சியைச் செலுத்தும் காலம் இதுவல்லவோ? அவனுடைய ஆக்கினைபோலும்.

ஷண்—பரிமளா! என்னைக் கேலிபண்ணுகின்றாய். விமலாவும் உன்னுடன் சேர்ந்துவிட்டாள். இனி உங்கள் இருவரையும் நான் ஒருவளாக எதிர்க்க எவ்வாறு இயலும்?

விமலா—அம்மணீ உங்களைப் பரிகாசம் செய்யவில்லை.என்மனத்தே தோன்றிய காரணத்தைத் தெரிவித்தேன்.

ஷண்—ஒருநாளும் இல்லாத மனக்கிளர்ச்சி இன்று உண்டாவதேன்?

விமலா—அதை நீங்கள் எவ்வாறு அறியக்கூடும்?

(தொடரும்)

இராமநாதய்யர்.

மதிப்புரை.

பிரசங்க ரத்தினதீபம்.

இப்புத்தகம் தமிழரசின் பார்வைக் கனுப்பப்பட்டது.. இதனை ஆக்கியோர் யாழ்ப்பாணம் உடுவில் இரத்திநேஸ்வரையரவர்கள். இவர் வடமொழி தென்மொழியாகிய இருபெருமொழியினுஞ்சிறந்த பாண்டித்தியம் பெற்றுவிளங்கிய யாழ்ப்பாணத்துச் சுன்னுகம் திருவாளர் குமாரசுவாமிப் புலவரவர்கள் சீடராவார். இவர் குமாரசுவாமிப் புலவரவர்களின் சீடரென்று விவர்செய்த நூலைப்பற்றி வியக் ... வேண்டுமா? பிரசங்கமுறைதெரியாத விரசங்கத்தார்க்கு மிகப் ...டுமாறிவர். பிரசங்க ரத்தினதீபமென்றுக்கிய திருவர்ளர் ...வாமிப் புலவரவர்கட்கே யுரிமையாக்கி யுள்ளார். இதனல் ...தி விசேஷந்தெரிகின்றது. ஒருபெரியார்க்கொன் றுதவுத ... லஃதெத்துணைச் சிறப்புடைத்தாயிருக்குமென்பது கற்றூர் ...ந்த விஷயம். இதுபோன்ற நூலின்னுமியற்றித் தமிழ்மக் ...குதவுமா றன்னார்க்கு நீண்டவாயுளுஞ் செல்வமு மளிக்குமாறு மீனுக்ஷியைப் பிரார்த்திக்கின்றேன்.

வெண்பா.

நாடுபிர சங்க ரத்தினதீ பப்பெயர்நூ
னீடுலகி னின்று நிலவவே—பாடுவில்
வந்தாத்தி நேசு வரையரவர் மாந்தர்க்குத்
தந்துல கத்துயர்ந்த தாம்.

P. பாஸ்கரன்.
போறுப்பாளன்.

தமிழரசு விளம்பர விகிதம்.

மாதம் பக்கம் ஒன்றுக்கு	ரூ	4—0—0
,, அரைப்பக்கம்	,,	2—8—0
,, கால் பக்கம்	,,	1—[illegible]—0

பொறுப்பாளர், தமிழரசு ஆபீஸ், ம[illegible]

அபிப்பிராயம்.

தமிழரசு:—இப்பெயர்பூண்ட செந்தமிழ்ப் பத்திரிகையின் சில பகுதிகள் எனக்குக் கிடைத்தன. நான், அவற்றைப் படித்து மகிழ்ந்தேன். அவ்வரசு வேம்பத்தூர் வழியாக வெளிப்போந்தமை செந்தமிழ் வளர்ச்சிக்கு ஒரு ஏறுவாகுமென உவகையுற்றேன். செந்தமிழ்மாது திருநடம் புரியும் சுந்தரப்பாண்டி வளநாட்டுத் தலைநகரமான மதுராபுரியை ஆஸ்தானமாகக் கொண்டமையால், அவ்வரசு நீடூழி வாழும் என்று பூரணமாக நம்புகின்றேன். ஆசிரியரவர்களும், பொறுப்பாளராகிய பண்டிதரவர்களும் பல்லாண்டு வாழவும், செந்தமிழபிமானிகள் அரசு செழிக்கத்தக்க உணவளித்து ஆதரிக்கவும், கான் மாறியாடி, ஆனேறுகந்த பெருமான் றிருவருளைப் போற்றுகின்றேன். சுபம்.

கீழைச்சிவப்பட்டி இரக்தாக்ஷி ௵ ஆனி ௴ ௰௯ ௳	இங்ஙனம், யாழ்ப்பாணம், பண்டிதர். வ. மு. இரத்தினேசுவரையர்.

பொதுசமாச்சாரம்.

கங்கையில் ஏற்பட்ட நீந்தற்போட்டியில் ௨-மணி ௰-நிமிஷம் ௫-செகண்டிற்குள் ௩௫-மைல் அளவை ஸ்ரீமான் பிரபல குமார கோஷ் நீந்திவிட்டார்.

நிஜாம் ராஜ்யத்தில் கோழி, எருது, எருமை, குருவி, குயில் ஆகிய இவற்றின் சண்டையை யாரும் நடத்தினால் ஒருமாதக் காவலும் ௧௦௦ ரூபாய் அபராதமும் தண்டனையாக விதிக்கப்படுமாம்.

அமெரிக்கா ஐக்ய மாகாணத்திலுள்ள வாஷிங்டன் ஜில்லா அரசாங்கத்தார் தங்களுடைய வருமானத்தில் ௧௦௦ க்கு ௩௫-வீதம் கல்வியபிவிருத்திக்குச் செலவு செய்கின்றனராம்.

மோட்டார் இயந்திர வண்டித்தொழிலில் பெயர்பெற்ற ஹென்றிபோர்டு என்பவர் குறைந்த விலையில் சிறிய ஆகாய விமானங்களைச் செய்ய ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்.

இரண்டு உடம்பும் ஒரு தலையுமுள்ள குழந்தை:—அலுக்காமா என்னுமிடத்திலுள்ள ஒரு பெண் இரு உடலும் நாலு கால்களும் ஒரு தலையுமுள்ள ஒரு ஆண் குழந்தையைப் பெற்றாள். குழந்தை பிரசவத்திற்கு முன் இறந்துவிட்டது.

உலகத்திலுள்ள ஸ்திரீகள் அழகுசெய்துகொள்ளுவதில் பல்லை அவமதிக்கவில்லை. அரபி ஸ்திரீகள் பல்லுக்கு நீலவர்ணமும் சீன தேச ஸ்திரீகள் கருப்புவர்ணமும், ஜப்பானிய தேசத்துப் பெண்கள் கல்யாணம் ஆகும் வரையில் மஞ்சள் வர்ணமும் பூசிக்கொள்ளுகிறார்கள்.

இந்துக்களில் யாராவது கொட்டாவி விட்டால் வாய்க்கு நேராக ஒருதரம் கைகளைக் கொடுக்கின்றார்கள். விசிறியால் தன்னை விசிறிக்கொள்ளும் பொழுது தேகத்தில் விசிறி பட்டால் உடனே விசிறியை மூன்றுதரம் தட்டுகிறார்கள். பல்லி ஏதாவது சப்தஞ்செய்தால் சிலபேர் உடனே பூமியில் விரல் நுனிகளால் தட்டுகிறார்கள். ஒரு நல்லபாம்பை அடித்துக் கொன்றால் அதைத் தூரத்தில் எறிந்துவிடாமல் சுட்டுக்கொளுத்துகிறார்கள், இராக்காலங்களில் சிட்டி அடிக்கக் கூடாதாம். க்ஷவரம் செய்து கொள்ளுகிற தினத்தில் ரசச் சாதம் சாப்பிடக்கூடாதாம். இரவில் வெளிச்சமில்லாத இடங்களில் தனியாகச் சென்றால் கைகளைத் தட்டிக்கொண்டும் ராம் ராம் என்று சொல்லிக்கொண்டும் போனால் புழுப்பூச்சிகள், பேய், பிசாசுகள் அருகில் அண்டாதாம்.